# +2 கட்டாய வினாக்கள்.

## பாடம் – 1.

**1) உலகத்துவம் / விரிவுபடுத்தப்பட்ட முதலாளித்துவம்.**

பன்னாட்டு வாணிகத்தால் நாடுகளை இணைப்பதன் மூலம் உலக முன்னேற்றத்தின் எதிர்நோக்கும் உலகமயமாக்குதல் என்ற புதிய அங்காடி தத்துவத்தை குறிப்பிட்ட, உலகத்துவம் **(Globalism)** என்ற பதத்தை, **மேபிரட்டிஸ்டீகர் 2002** ஆம் ஆண்டு உருவாக்கினார். இத்தத்துவம், **விரிவுபடுத்தப்பட்ட முதலாளித்துவம்** என்றும் குறிப்பிடப்படுகின்றது.

**2) விலை இயங்கு முறை**

விலை இயங்கு முறையானது **முதலாளித்துவப் பொருளாதாரத்தின் இதயமாகும்.** அனைத்துப் பொருளாதார நடவடிக்கைகளும் விலை இயங்கும் முறை, **தேவை, அளிப்பு ஆகியன அங்காடி சக்திகளால் கட்டுப்படுத்தப்படுகின்றன.**

**3) சிவப்பு நாடா முறை**

**சமத்துவ பொருளாதார முறையில்** அனைத்து முடிவுகளையும் அரசு அமைப்புகளே எடுப்பதால், அரசு அலுவலர்கள் பலரின் அனுமதி பெற வேண்டி, **கோப்புகள் ஒரு மேசையிலிருந்து மற்றொன்றுக்கு செல்லும் கால அளவு அதிகமாகிறது. இதனால் சிவப்பு நாடா முறை ஏற்படுகிறது.**

**4) இருப்பு (Stock) தடைபடா ஓட்ட மாறி (Flow)**

| இருப்பு (Stock) | தடைபடா ஓட்ட மாறி (Flow) |
|---|---|
| இருப்பு (Stock) என்பவை ஒரு குறிப்பிட்ட **காலத்தில்** (Point of Time) கணக்கிடப்படும் பண்டங்களின் அளவினைக் குறிப்பதாகும். | தடைபடா ஓட்ட மாறிகள் (Flow) என்பவை ஒரு குறிப்பிட்டக் **காலகட்ட அளவில்** (Period of Time) கணக்கிடப்படுபவையாகும் |
| பேரியல் பொருளாதாரத்தில், பண அளிப்பு, வேலையில்லாமை அளவு, வெளிநாட்டு செலாவணி இருப்பு, மூலதனம் முதலானவை இருப்பு மாறிகளுக்கு எடுத்துக்காட்டாகும் | நாட்டு வருமானம், ஏற்றுமதி, இறக்குமதி, நுகர்வு, உற்பத்தி, முதலானவை தடைபடா ஓட்ட மாறிகளுக்கு எடுத்துக்காட்டாகும். |

**5) துறை மாதிரி (Sector Model)**

| | | |
|---|---|---|
| 1 | **இரண்டு துறை மாதிரி (Two Sector Model)** | **Y = C + I**<br>Y- என்பது வருவாய், C –என்பது நுகர்வு,<br>I - என்பது முதலீடு |
| 2 | **மூன்று துறை மாதிரி (Three Sector Model)** | **Y = C + I + G**<br>Y- என்பது வருவாய், C = என்பது நுகர்வுச் செலவு<br>I = என்பது முதலீடுச் செலவு G = அரசுச் செலவு |
| 3 | **நான்கு துறை மாதிரி (Four Sector Model)** | **Y = C + I + G + (X - M )**<br>Y- என்பது வருவாய், C = என்பது நுகர்வுச் செலவு<br>I = என்பது முதலீடுச் செலவு G = அரசுச் செலவு<br>(X - M ) = நிகர ஏற்றுமதி உள்ளடங்கும். |

## பாடம் – 2.

**6) உண்மை வருமாணம் (Real Income)**

பண வருமானத்தின் **வாங்கும் சக்தியே உண்மை வருமானம்** ஆகும். உண்மை வருமானத்தை கீழ்காணும் முறையில் கணக்கிடலாம்.

$$\text{நிலையயான விலையில் உண்மை வருமானம்} = \frac{\text{நடப்பு விலையில் நாட்டு வருமானம்}}{P1 / P0}$$

P1 = நடப்பு ஆண்டு விலைக் குறியீடு

P0 = அடிப்படை ஆண்டு விலைக் குறியீடு

**7) நாட்டு வருமானத்தை அளவிடும் முறைகள்.**

1) உற்பத்தி அல்லது மதிப்புக் கூடுதல் / சரக்குமுறை
2) வருமானம் அல்லது காரணிகள் முறை
3) செலவு முறை

**8) மூலதன இலாபம் (Capital Gains)**

1) மூலதன சொத்துக்களான வீடு, பிற சொத்துக்கள், பங்குகள் முதலானவற்றை அதிக விலைக்கு விற்பனை செய்வதன் மூலம் மூலதன இலாபம் கிடைக்கிறுத.
2) நாட்டு வருமானம் கணக்பீட்டில் **மூலதன இலாபம் சேர்க்கப்படுவது** இல்லை.

**9) மூலதனத் துறை.**

மூலதரனத் துறை சேமிப்பையும் முதலீட்டையும் உள்ளடக்கியது. காப்பீட்டு நிறுவனம், வங்கிகள், நிதி நிறுவனங்கள் ஆகியவற்றின் பண பரிமாற்றங்கள் இதில் அடங்கும் மூலதனத்துறை, நிறுவனங்களாக கருதப்படுவது இல்லை மாறாக தொழில் நிறுவனங்களுக்கு இவை நிதி உதவி செய்து வருகின்றன.

**10) PQLI (Physical Quality of life Index)** என்பது பொருளாதார நலனைக் கணக்கிடுவதில் முக்கிய குறியிட்டெண்ணாக உள்ளது. மக்களின் வாழ்க்கைத் தரம், வாழும் காலம், கல்வியறிவு ஆகியவை PQLIயில் உள்ளடங்கி இருக்கிறது.

**11) சமூகக் கணக்கீடு**

பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொள்வதால் ஏற்படுகிற சமூகச் செலவுகளின் அடிப்படையில் நாட்டு வருமானம் கணக்கிடப்படுகிறது.

**இம்முறை ஐந்து வகைப்படும்.** ( 1. நிறுவனங்கள் 2. குடும்பங்கள் 3. அரசு 4. வெளி நாட்டு வாணிகம் 5. முலதனத்துறை).

**12) மாற்று செலுத்துதல்**

வேலையற்றோருக்கு அரசு அளிக்கும் உதவித்தொகை, முதியவர்களுக்கு வழங்கப்படும் ஒய்வூதியம் முதலானவை.

## பாடம் – 3.

**13) சேயின் சந்தை விதியின் எடுகோள்கள்**

1. **முழு வேலை** நிலவும்.
2. **அங்காடி சக்திகளே** அனைத்தையும் நிர்ணயிக்கின்றன. அரசின் தலையிடாக் கொள்கை அவசியமாக உள்ளது.
3. உழைப்பு, பண்டங்கள் ஆகியவற்றின் **அங்காடியில் நிறைவுப்போட்டி நிலவும்.**
4. கூலியிலும் விலையிலும் நெகிழும் தன்மை உண்டு.
5. பரிவர்த்தனைக்கு **மட்டுமே பணம் உதவும்.**
6. இது **நீண்ட கால** பகுத்தாய்வை அடிப்படையாகக் கொண்டது.
7. அதிக உற்பத்திக்கோ வேலையின்மைக்கோ வாய்ப்பில்லை.
8. விலைக் கருவி தனாக இயங்குவதால் அங்கு அரசின் தலையீடு தேவை இருக்காது.
9. வட்டி வீத நெகிழ்வுத் தன்மை, சேமிப்பிற்கும் முதலீட்டிற்கும் சமநிலையை உருவாக்கும்.

13) **வேலைக் குறைவு என்றால் என்ன ?**
உற்பத்தியில் வளங்களை (உ.ம் உழைப்பு) முழுமையாக பயன்படுத்தப்படாமல் இருப்பது.

14) **இறுதி நிலை நுகர்வு விருப்பம்**
இருக்கின்ற வருமானத்தில் ஓர் அலகு வருமானம் உயரும்போது அதிகரிக்கக் கூடிய நுகர்வுச் செலவு. இறுதி நிலை நுகர்வு வருப்பம் எனப்படும்.

15) **மூலதனத்தின் இறுதி நிலை உற்பத்தித் திறன்.**
புதிய மூலதன பொருளின் செலவை காட்டிலும் அதிகமாக எதிர்பாக்கக் கூடிய விளைவு விகிதம்.

## பாடம் – 4.

16) **முதலீட்டு சார்பு**

1. முதலீட்டுச் சார்பு என்பது முதலீடு மற்றும் வட்டி வீதத்திற்கிடையேயான தொடர்பைக் குறிப்பிடுகிறுத.
2. முதலீட்டிற்கும் வட்டி வீதத்திற்கும் உள்ள சார்பு **தலைகீழ்த் தொடர்பு உள்ளது.**

**I = f(r)**
**I = முதலீடு ( சார்பு மாறிகள்)**
**F = வட்டி வீதம் ( சார்பற்ற மாறிகள்)**

### 17) முதலிடு என்பதன் – பொருள்

1) முதலீடு என்பது பங்குகள், கடன் பத்திரங்கள், அரசாங்க பத்திரங்கள் பங்குகள் ஆகியவற்றை வாங்குவதாகும்.
2) கீன்சு கூற்றுப்படி, முதலீடு என்பது நிதி முதலீட்டை மட்டும் குறிக்கும், உண்மையான முதலீட்டைக் குறிக்காது இது மாதிரியான முதலீடு நாட்டின் உண்மையான மூலதன இருப்பில் சேர்ப்பதில்லை.
3) கீன்சின் பார்வையில் முதலீடும் மூலதன முதலீட்டுச் செலவை உள்ளடக்கியது ஆகும்.

18) **முதலீட்டுச் சார்பினை தீர்மானிக்கும் காரணிகள்**

1. வட்டி வீதம்
2. நிலையற்ற தன்மை
3. அரசியல் சூழல்
4. மக்கள் தொகை வளர்ச்சி வீதம்
5. மூலதனப் பண்டங்கள் இருப்பு
6. புதிய பண்டங்களின் தேவை
7. கண்டு பிடிப்புகளும், புத்தாக்கமும்
8. நுகர்வுத் தேவை
9. அரசுக் கொள்கை
10. முதலீட்டாளர்களின் சொத்துகளின் ரொக்கத்தன்மை

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

19) பெருக்கியின் வகைகள்.

1. இயங்காப் பெருக்கி, 2. இயங்கும் பெருக்கி 3. நேர்கணியப் பெருக்கி 4. எதிர்மறைப் பெருக்கி. 4. வரிப் பெருக்கி 5. வேலைவாய்ப்புப் பெருக்கி 6. வெளி நாட்டு வணிகப் பெருக்கி 7. முதலீடு பெருக்கி

| நேர்கணியப் பெருக்கி | எதிர்மறைப் பெருக்கி |
|---|---|
| திட்டச்செலவில் துவக்க நிலையில் ஏற்படும் அதிகரிப்பை குறிக்கின்றது | திட்டச்செலவில் துவக்க நிலையில் ஏற்படும் குறைவை குறிக்கின்றது |
| கசிவு குறையும்போது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் மிகப்பெரிய இறுதிநிலை உயர்வை ஏற்படுத்தும் | கசிவு அதிகரிக்கும்போது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் மிகப்பெரிய இறுதிநிலை குறைவை ஏற்படுத்தும் |

**20) நெம்புகோல் பெருக்கி**

பெருக்கியின் தாக்கமும், முடுக்கியின் தாக்கமும் ஒருங்கிணைந்து செயல்படும் தாக்கம் நெம்புகோல் இயக்க விளைவு எனப்படும். இது பொருளாதாரத்தில் அதிகமான அல்லது குறைவான வருமானம் பெருக்கத்திற்கு இட்டுச் செல்லும்.

$$Y= C+ Ia +Ip$$

Y= மொத்த வருவாய்

C= நுகர்வுச் செலவு

Ia = தன்னிச்சையான முதலீடு

Ib = தூண்டப்பட்ட தனியார் முதலீடு

**21. மேம்பட்ட பெருக்கி**

பெருக்கி, முடுக்கி ஆகியவற்றின் மொத்த விளைவு மேம்பட்ட பெருக்கி எனப்படும்.

**22. டூசன் பெரியின் ஊகம் (அனுமானங்கள்)**

1. நுகர்வு செலவானது தற்போதைய வருமானத்தை மட்டும் சார்ந்து இல்லாமல் முந்தைய வருமானத்தையும் வாழ்க்கைத் தரத்தையும் சார்ந்து இருக்கும். தனி மனிதர்கள் குறிப்பிட்ட வாழ்க்கைத் தரத்துடன் வாழ்ந்து பழக்கப்பட்டு இருப்பதால் தற்போதைய வருமானம் குறைந்தாலும் தொடர்ந்து ஒரே மாதிரியாக நுகர்வச் செலவு மேற்கொள்வார்கள்.

2. வெளிக்காட்டும் விளைவின் காரணமாகவும் நுகர்வு தீர்மானிக்கப்படுகிறது. குறைவான வருமானம் உடைய மக்களும், அதிக வருமானம் உடைய மக்களின் நுகர்வுச் தரத்தால் தூண்டப்படுவார்கள். மற்றொரு வகையில் ஏழை மக்கள் செல்வந்தர்களின் நுகர்வு போன்றே செலவு செய்ய விரும்புவார்கள். இது அவர்களின் வருமானத்தையும் தாண்டி செலவு செய்ய வைக்கும்.

**23. மூலதனத்தின் இறுதி நிலை ஆக்கத்திறின்( MEC)**

ஜே. எம்.கீன்சு 1936–இல் அறிமுகப்படுத்தினார்.

மூலதன அலகிலிருந்து எதிர்பார்க்கப்படும் **இலாபமே மூலதன இறுதிநிலை ஆக்கத்திறன் (MEC)** என்று வரையறுக்கப்படுகிறது.

**MEC–யைப் பாதிக்கும் காரணிகள்**

1. மூதலன சொத்தின் அளிப்பு விலை
2. அதன் வாழ்நாளில் எதிர்பாக்கப்படும் **விளைவு விகிதம்**
3. வருங்கால வட்டி விகிதம்.

**24. பெருக்கியின் எடுகோள்கள்.**

1. தன்னிச்சை மூதலிட்டில் மாற்றம் உண்டு.
2. தூண்டப்பட்ட முதலீடு இல்லை.
3. இறுதி நிலை நுகர்வு நாட்டம் நிலையாக இருக்கும்.
4. நுகர்வு நடப்பு வருமானத்தைச் சார்ந்தே இருக்கும்.
5. பெருக்கியின் செயல்பாட்டில் கால இடைவெளி இல்லை.
6. நாடு முடிய பொருளாதாரமாகும், அந்நிய நாட்டின் செயல்பாடுகள் தாக்கத்தை ஏற்படுத்தாது
7. விலையில் மாற்றம் இல்லை.
8. முழு வேலைவாய்ப்பு நிலைக்குக் கீழ் பொருளாதாரம் செயல்படுகிறது.

**25. பெருக்கியின் கசிவுள் / குறைகள்**

**1. பழைய கடன்களைத் திரும்பச் செலுத்துதல்.**

பழைய கடன்களைத் திரும்பச் செலுத்துவதற்காக அதிகரித்த வருமானம் பயன்படுமானால் இறுதிநிலை நுகர்வு நாட்டாம் குறைந்து அதன் காரணமாகப் பெருக்கியின் மதிப்பு தடைப்படும்.

**2. செல்வத்தை வாங்குதல்.**

அதிகரித்த வருமானம் நடைமுறையில் உள்ள செல்வங்களான நிலம், கட்டிடம் பங்குகள் முதலானவற்றை வாங்குவதற்காகப் பயன்படுத்தினால் பணம் மக்களிடையே சுழன்று கொண்டு இருக்கும். நுகர்வுக்கு வராது. இதன் விளைவாக பெருக்கியின் மதிப்பு பாதிக்கும்.

**3. வேலைவாய்ப்பு நிலை.**

முழு வேலைவாய்ப்பு நிலையில், பெரும்பாலும் எல்லா வளங்களும் பயன்படுத்தப்பட்டு இருக்கும். ஆதலால் அதிகரிக்கின்ற வருமானம் பணவீக்கத்திற்கு வழி வகுத்து உண்மை வருமானம் ஏற்படாமல் செய்து விடும்.

**4. பண்டங்களையும் ,பணிகளையம் இறக்குமதி செய்தல்**

**5. நுகர்வுப் பண்டங்கள் பொருட்களின் கிடைக்காமை.**

**26. பெருக்கியின் பயன்கள்.**

1. வணிகச் சுழற்சியின் பல்வேறு நிலைகளுக்கான காரணங்களை விளக்குகின்றன.
2. சேமிப்பு, முதலீடு, ஆகியவற்றுக்கு இடையே சமநிலை ஏற்பட உதவுகிறது
3. அரசின் கொள்கைகளை வகுக்க உதவுகிறது.
4. வேலையில்லாத நிலையை போக்கவும், முழு வேலைவாய்ப்பு நிலையை அடையவும் உதவுகிறது.
5. வருமானம் மற்றும் வேலைவாய்புக் கோட்பாட்டில் **முதலீட்டின்** முக்கியத்துவத்தைப் பெருக்கி சுட்டிக் காட்டுகிறது.

**27. முடுக்கியன் எடுகோள்கள்.**

1. நுகர்வுப் பண்டங்கள் தொழில் துறையில் எச்ச சக்தியின்மை.
2. நிலையான மூலதனம் – உற்பத்தி விகிதம்.
3. தேவையின் அதிகரிக்கும் தன்மை நிலையாக இருக்கும் என்று ஊகித்தல்.
4. நிதி அளிப்பும் மற்ற உள்ளிடு பொருட்களும் நெகிழ்ச்சியுடையன.
5. மூலதனப் பண்டங்கள் தேவைப்படும் அளவுக்கு பகுக்க முடியும்.

**28. முடுக்கியின வரையறைகள் / குறைபாடுகள்.**

1. நிலையான மூலதனம் – உற்பத்தி விகிதம் எனும் எடுகோள் உண்மையானது அல்ல.
2. முழு நிலைவேலையாய்ப்பிற்கு முன்பு வரை மட்டுமே வளங்கள் கிடைக்கும்.
3. மூலதனப் பண்டங்கள் தொழிற்சாலையில் உபரி சக்தி உள்ளதாக ஊகிக்கப்படுகிறது.
4. முடுக்கியானது தேவை அதிகரித்தல் நிலையானது என்ற நிலையில் மட்டுமே வேலை செய்யும்.
5. கடன் எளிதாக கிடைத்தால் மட்டுமே முடுக்கி செயல்படும்.

## பாடம் – 5.

**29. பண்ட மாற்று முறை**

பண்டமாற்று முறையின் வரலாறு **6000 BCயில்** துவங்கியது.

**மெசபடோமியா பழங்குடியினரால்** பண்டமாற்றுமுறைப் பயன்படுத்தப்பட்டது.

**பொனீஷியர்களால் கடல் கடந்து** பல்வேறு நகரங்களில் இம்முறை பயன்படுத்தப்பட்டது.

**பாபிலோனியர்கள் பண்டங்களுக்குப் பண்டங்களை** மாற்றும் பண்டமாற்று முறையை பயன்படுத்தினர்.

**30. பண அளிப்பின் பொருள்.**

1. இந்தியாவில் **காகிதப் பணங்கள் இந்திய ரிசர்வ் வங்ககியாலும்**
2. **நாணங்கள் மத்திய அரசின் நிதித்துறையாலு**ம் வெளியிடப்படுகின்ற.

**31. பணக் குறியீடு.**

1. இந்திய தொழில்நுட்பக் கழகம் (IIT)மும்பையில் முதுகலை பட்டம் பெற்ற திரு.D உதயகுமாரால் வடிவமைக்கப்பட்ட புதிய பக் குறியீடு **சூலை 15, 2010** ஆம் ஆண்டில் மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டது.
2. **தேவநாகிரி எழுத்து 'ரா' வும் ரோமன் எழுத்து 'R' இல் செங்குத்துக்கோடு இல்லாமலும் உள்ள வடிவமைப்பாகும்.**
3. அமெரிக்கா, பிரிட்டன், ஜப்பான், ஐரோப்பா நாடுகளுக்குப்பின் இந்தியா தனிப் பணக் குறியீடு கொண்ட நாடாக விளங்குகிறது.

**32. மெய்நிகர் பணம் என்றால் என்ன.**

மைய வங்கியை சாராமல் பணம் பெருக்கத்தை சீர் செய்தல், நிதி மாற்றத்தை சரிபார்த்தல் ஆகிய சுதந்திரம் கொண்ட டிஜிட்டல் நாணயங்கள் மெய்நிகர் பணமாகும்.

**பிட்காயின்** போற பரவலாக்கப்பட் பணம் தனிமனிதர் சொத்துகளை கட்டுப்பாட்டுக்குள்ளும் கையகப்படுத்துதலுக்குள்ளும் உட்படாமல் இருக்க ஒரு வழிமுறையாகப் பயன்படுத்தப்படுகின்றன.

**33. மீள்பணவீக்கம் என்றால என்ன.**

"வேலைவாய்ப்பின்மையை ஏற்படுத்தாமலும், உற்பத்தி அளவுகள் குறையாமலும் பணவீக்கத்தை **திருப்பும் செயல்முறையே** மீள்பணவீக்கம் ஆகும்."

**34. மந்தத்தின் கீழ் நிலை தொட்டி விளக்கம் தருக.**

மந்தத்தின் கீழ் நிலை " **தொட்டி" (Trough)** என அழைக்கப்படுகிறது. எவ்வாறு ஒருவர் மிக ஆழமான தொட்டிக்குள் தவறி விழுந்து விட்டால் பிறர் உதவியின்றி எளிதி ல் மீள முடியாதோ, அதுபோல பொருளாதார நடவக்கைகள் மந்த நிலையின் ஆழத்தில விழுந்துவிட்டால், **வெளியர் உதவியின்ற தானே மீள இயலாத நிலையைக் குறிக்**க " **தொட்டி" (Trough)** எனும் கருத்து பயன்படுத்தப்படுகிறது.

# பாடம் – 6.

**35. பயணக் காசோலை குறிப்பு எழுதுக.**

பயணக் காசோலை என்பது ஒரு பரிமாற்ற ஊடகம். இது கடினமான நாணயத்திற்கு மாற்றாக பயன்படுத்தலாம். இந்த காசோலைகள் வெளிநாடுகளுக்கு விடுமுறையில் பயணிக்கும் நபர்களுக்கு வழங்கப்படுகின்றன. பயணக் காசோலைகளை வழங்குவதன் மூலம் வெளிநாட்டு பயனத்தின்போது பண பாதுகாப்பினை வழங்குகிறது.

**36. ரொக்க இருப்பு வீதம் (CRR)**

1. ரொக்க இருப்பு விகிதம் வணிக வங்கிகளிடம் வந்து சேரும் கேட்பு மற்றும் கால வைப்புகளிலும் ஒரு குறிப்பிட்ட விழுக்காட்டை மைய வங்கியில் இருப்பாக வைக்கவேண்டும்.
2. இது மையவங்கி சட்டத்தின்படி பின்பற்ற வேண்டியது ஆகும். இதுவே ரொக்க இருப்பு விகிதம் எனப்டுகிறது.

**37. மாறும் ரொக்க இருப்பு வீதம் (Variable Cash Reserve Ratio)**

1. மையவங்கி ரொக்க இருப்பு விகிதத்தை அதிக படுத்தினால் வணிக வங்கிகளின் கடன் உற்பத்தி அளவு குறையும்.
2. மாறாக மையவங்கி ரொக்க இருப்பு விகிதத்தை குறைந்ததால் வணிக வங்கியின் கடன் உற்பத்தி அதிகமாகவும் இருக்கும். இவ்வாறு மையவங்கி மேற்க்கொள்ளும் நடைமுறை செயல் பாட்டிற்கு **மாறும் ரொக்க இருப்பு வீதம் எனப்படும்.**

மாறும் ரொக்க இருப்பு விகிதம் என்பது **பணவியல் கொள்கையன் ஒரு கருவி.**

**இதனை முதன் முதலக கீன்சு பரிந்துரைத்தார்.**

**ஆமெரிக்க மைய வங்கியான பெடரல் ரிசர்வ் சிஸ்டம் முதன் முதலில் அமல்படுத்தியது.**

**38. நெறிமுறை தூண்டல் என்றால் என்ன**

மைய வங்கியின் பணவியல் கொள்கையின்படி 1934 ஆம் ஆண்டின் இந்திய ரிசர்வ் வங்கிச் சட்டம், 1949–ஆம் ஆண்டின் வங்கி நெறிமுறைச் சட்டம் ஆகிய வற்றின் அடிப்படையில் **கடன் தன்மைக் கட்டுப்பாட்டு முறைகளின் ஒன்றாக நெறிமுறைத் தூண்டல் நடவடிக்கை பின்பற்றப்படுகிறது.**

வணிக வங்கிகளின் கடன் அளவை கட்டுப்படுத்த **மைய வங்கி அடிக்கடி** இம்முறையின்கீழ், **அறிவுரரைகளையும் வேண்டுகோளையும்** வைப்பதன் மூலம் வணிக நெறிமுறையினைப் போதித்து **வணிக வங்கிகள் வழங்கும் கடன்களைக் கட்டுப்படுத்தப்படுகிறது.**

**39. பணத்தின் அளிப்பை கட்டுப்படுத்தும் இதிய ரிசர்வ் வங்கியால் மேற்கொள்ளப்படும் கருவிகளைப் பற்றி விவரி ?**

**1. ரெப்போ விகிதம்**

1. வணிக வங்கிகளுக்கு **மையவங்கி விதிக்கும் குறுகிய கால கட**ன் வழங்கும் பொழுது **விதிக்கும் வட்டி விகிதமே** ரெப்போ விகிதம் எனப்படுகிறது.
2. இவ்வங்கிகளுக்கு நிதிப்பற்றாக்குறை ஏற்படும் பொழுது அவை பத்திரங்களை ஈடாக வைத்து இந்திய ரிசர்வ் வங்கியில் கடன்களைப் பெறும். அந்நிலையில் விதிக்கப்படும் வட்டி விகிதமே ரெப்போ விகிதம் எனப்படுகிறது.
3. பண வீக்கத்தை கட்டுப்படுத்த **ரெப்போ விகிதத்தை அதிகரிப்பதன் மூலம் கடன்** வாங்குவதற்கான செலவை அதிகப்படுத்தி கடன் வாங்குவதைக் குறைக்கிறது.

**2. மீள் ரெப்போ விகிதம்.**

**1. வணிக வங்கிகளிடமிருந்து வாங்கும் கடனுக்கான இந்திய ரிசர்வ் வங்கி கொடுக்க விரும்பம் வட்டி விகிதமே மீள் ரெப்போ விகிதம் எனப்படுகிறது.**

2. மீள் ரெப்போ விகிதத்தை உயர்த்தினால், அது வணிக வங்கிகளுக்கு இலாபகரமான வட்டி விகிதமாகி அவற்றிடம் உள்ள பணத்தை ரிசர்வ் வங்கியிடம் கொண்டு வந்து சேர்க்கிறது. இதனால் அந்தப் பணத்திற்கு உயர் பாதுகாப்பு கிடைக்கிறது.

3. இதனால் வணிக வங்கிகள் தனது வாடிக்கையாளர்களுக்கு கடன் கொடுப்பது குறைகிறது. இது இயற்கையாகவே வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படும் கடனுக்கான வட்டி விகிதத்தை உயர்த்தும்.

**40. வட்டார ஊரக வங்கிகள். RRBs**

வட்டார ஊராக வங்கிகள் **கிராமியன் வங்கிகள்** என்று அழைக்கப்படுகிறது. 1975 ஆம் ஆண்டு அரம்பிக்கப்பட்டது.

மறைந்த பிரதமர் **திருமதி. இந்திராகாந்தி அவர்களின் 20 அம்சதிட்டத்தின் மூலம் கொண்**டு வரப்பட்டது.

கிராமங்களில் வசிக்கும் விவசாயிகள் மற்றும் கைவினைஞர்களின் **கடன் சூழலிருந்து மீட்பதற்கு வங்கி உதவுகிறது.**

**41. விரிவாக்க பணக்கெள்கை ( மலிவுப் பணக்கொள்கை) / சுருக்கப் பணக்கொள்கை (அருமைப் பணக்கொள்கை)**

1. **விரிவாக்க பணக்கொள்கை (மலிவுப் பணக் கொள்கை )**
   1. விரிவாக்க பணக்கொள்கை என்பது **மலிவுப் பணக்கொள்கையாகும்.**
   2. பணவியல் அதிகார அமைப்பான மையவங்கி நடப்பு குறுகிய கால வட்டி விகிதத்தைவிட குறைவான வட்டி விகிதத்தையும், வழக்கத்தைவிட வேகமான பண அளிப்பையும் ஏற்படுத்துவது விரிவாக்கப பணக்கொள்கையாகும்.
   3. இது பரம்பரியமான பொருளாதார நடவடிக்கைகிளின் **பின்னிறக்க காலத்தில் ஏற்படும்** வேலையின்மைக்கு எதிர்ராக எடுக்கப்படும்.
   4. வட்டி விகித குறைப்பு நடடிவக்கை கடனுக்கு ஆகும் செலவை குறைத்துத் **தொழில் உற்பத்தியையும், வணிகத்தையும் விரிவாக்கும்** இதனால் மொத்த உள்நாட்டு உற்பத்தி அதிகரித்து குறுகிய கால வளர்ச்சியை தூண்டும்.
   5. **பணவாட்டம்** காலத்தில் இக்கொள்கை பின்பற்றப்படும்.
2. **சுருக்கப் பணக்கொள்கை (அருமைப் பணக்கொள்கை)**
   1. சுருக்கப் பணக்கொள்கை என்பது **அருமைப் பணக்கொள்கை எனப்படுகிறது.**
   2. பணவியல் அதிகார அமைப்பான மையவங்கி குறுகிய கால வட்டிவிகிதம் நடப்பு வட்டிவிகிதத்தைவிட அதிகப்படுத்துவது, பண அளிப்பினைக் குறைப்பது அல்லது சுருக்குவது ஆகும்.
   3. இது பொருளாதாரத்தின் குறுகிய கால வளர்ச்சியைக் குறைத்துப் பணவீக்கத்தைக் குறைப்பதாகும்.
   4. சுருக்கப் பணக்கொள்கை வேலைவாய்ப்பின்மையை அதிகரித்து நுகர்வோரும் உற்பத்தியாளர்களும் கடன் வாங்குவதையும் செலவு செய்வதையும் குறைப்பதன் மூலம் பொருளாதாரத்தைப் பின்னோக்கி திருப்புவது ஆகும்.
   5. **பணவீக்க காலத்தில்** இக்கொள்கை கடைபிடிக்கப்படும்.

**42. பணக் கொள்கையின் இரண்டு நிலைகள்.**

**பணவீக்கம்**

1. கடன் பெறுதல் எளிது 2. நுகர்வோர் அதிகம் நுகர்வர் 3. வணிகம் விசாலமாகும். 4. அதிக மக்கள் வேலை பெறுவார்கள். 5. மக்கள் அதிகம் செலவு செய்வார்கள்.

**பண வாட்டம்.**

1. கடன் பெறுதல் கடினம் 2. நுகர்வோர் குறைவாக நுகர்வார். 3. வணிக விரிவாக்கம் தள்ளிப்போகும். 4. வேலையின்மை அதிகரிக்கும். 5. உற்பத்தி குறையும்.

**43. செயல்படாத சொத்து.**

1. கடன் வாங்குபவர் தொடர்ந்து **90 நாள்களில் வட்டியோ கடன்தொகையின் அசல் பகுதியையோ செலுத்தாமல் இருந்தால் அதை செயல்படாத சொத்து என்கிறோம்.**
2. இதன் விளைவாக வங்கிகளில் மூலதனப் பற்றாக்குறை ஏற்படுகிறது.
3. இந்திய அரசு ஏழை மக்களின் வரிப்பணத்தினை பயன்படுத்தி அப்பாற்றாக்குறையச் சரிசெய்யும் நெருக்கடிக்கு ஆளாகிறது.
4. **2018–19ஆம் ஆண்டுகளில் 68,000 கோடி** மத்திய அரசு வங்கிகளுக்கு செலுத்தியுள்ளது. இவ்வாறு செயல்படா சொத்துகள் **சாதாரண மக்களைப் பாதிக்கிறது.**

**44. பண அங்காடியையும் மூலதன அங்காடியையும் வேறுபடுத்துக.**

| வ.எண். | பண அங்காடி | மூலதன அங்காடி |
|---|---|---|
| 1 | அதிக நீர்மை தன்மையைக் கொண்டதும் குறுகிய காலத்தில், முதிர்ச்சியுறுவதுமான நிதிக் கருவிகைகளைக் கையாளும் அங்காடியே பண அங்காடி | நீண்ட கால நிதிக் கருவிகளை வணிகம் செய்யும் அங்காடி மூலதன அங்காடி எனப்படும். |
| 2 | ஒரு நாள் முதற்கொண்டு ஒரு ஆண்டிற்குள் முதிர்ச்சியடையும் நிதிக் கருவிகள் இவ்வாங்காடியில் கையாளப்படுகின்றன. | உற்பத்தி நோக்கில் நிறுவனங்களும் அரசுக்குத் தேவைப்படும் நிதியைத் திரட்டும் இடமாகவும் மூலதன அங்காடி இருக்கிறது. |
| 3 | இங்கு கையாளப்படும் நிதிக்கருவிகள், அரசு பத்திரங்கள், அழைப்புப் பணம், வைப்புச் சான்றுகள் வங்கியாளர் ஏற்புகள், மாற்றுச் சீட்டுகள், மறு வாங்கல் ஒப்பந்தங்கள், கருவூல உறுதிச் சீட்டுகள் அயல் நாட்டுச் செலாவணிகள். | மூலதன அங்காடியில் பயன்படுத்தப்படும் பாரம்பரியமான நிதிக்கருவிகள், கடன் பத்திரங்களும், சமபங்குகளும் ஆகும். |

## பாடம் – 7.

45. தொன்மைக் கோட்பாடும், புதிய பன்னாட்டு வாணிகக் கோட்பாடு.

| வ.எண். | தொன்மைப் பன்னாட்டு வாணிகக் கோட்பாடு | புதிய பன்னாட்டு வாணிகக் கோட்பாடு. |
|---|---|---|
| 1 | பன்னாட்டு வாணிகததை விளக்குவதற்கு **உழைப்பைச்** சார்ந்த மதிப்புக்கோட்பாட்டை அடிப்படையாகக் கெண்டது. | பன்னாட்டு வாணிகததை விளக்குவதற்கு **பொது மதிப்புக்** கோட்பாட்டை அடிப்படையாகக் கெண்டது. |
| 2 | இது ஒரு காரணி (உழைப்பு) மாதிரியாகும் | இது இரு காரணி (உழைப்பு, மூலதனம்) மாதிரியாகும். |
| 3 | ஒப்புமைச் செலவு வேறுபாட்டிற்கு உழைப்பாளர்களின் உற்பத்தித் திறன் வேறுபாடுகள் காரணம் என்கிறது. | ஒப்புமைச் செலவு வேறுபாட்டிற்கு உழைப்பாளர்களின் கிடைப்பளவு வேறுபாடுகள் காரணம் என நம்புகிறது. |

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

46.

| வ.எண். | விவரம் | ஆண்டுகள் |
|---|---|---|
| 1 | இந்திய இம்பீரியல் வங்கி | 1921 |
| 2 | இந்திய ரிசர்வ் வங்கி தேசியமயமாக்கப்பட்டது (RBI) | ஜனவரி 1, 1949. |
| 3 | இந்திய ஸ்டேட் வங்கி (SBI) | 1955 |
| 4 | ஆயல் நாட்டுச் செலாவணி மேலாண்மைச் சட்டம் (FEMA) | 1999 |
| 5 | அமெரிக்காவின் பிணைய பரிவர்த்தனை சட்டம் | 1934 |
| 6 | வேளாண் மறுகடன் மேம்பாட்டுக் கழகம் | சூலை 1, 1963 |
| 7 | வட்டார ஊரகவங்கி (RRBs) | 1975 |
| 8 | NABARD | சூலை 1982 |
| 9 | இந்திய தொழிற் கடன் மற்றும் முதலீட்டுக் கழகம் (ICICI) | ஜனவரி 5, 1955 |
| 10 | இந்திய தொழில் மேம்பாட்டு வங்கி (IDBI) | பிப்ரவரி 16, 1976 |
| 11 | ஏற்றுமதி இறக்குமதி வங்கி (Exim bank) | மார்ச் 1982 |
| 12 | மாநில நிதிக் கழகங்கள் (SFCs) | 1951 |
| 13 | அமெரிக்க ஐக்கிய அரசுகளின் பணவியல் வரலாறு **(மில்டன் பிரைட்மேனால் எழுதப்பட்ட புத்தகம்)** | 1867 –1960 |
| 14 | மில்டன் பிரைட்மேனன் நோபல் பரிசு பெற்ற ஆண்டு. | 1976 |
| 15 | தானியங்கி பணம் வழங்கும் இயந்திரம் (ATM) | 1967 |
| 16 | பே.டி.எம். (Paytm) | ஆகஸ்ட்டு 2015 |
| 17 | வங்கி இணைப்பு | ஏப்ரல் 1, 2017 |
| 18 | பண மதிப்பு நீக்கம் ( ரூ. 500, ரூ.1000) | நவம்பர் 8, 2016. |

## பாடம் – 7.

**46.** தொன்மைக் கோட்பாடும், புதிய பன்னாட்டு வாணிகக் கோட்பாடு.

| வ.எண். | தொன்மைப் பன்னாட்டு வாணிகக் கோட்பாடு | புதிய பன்னாட்டு வாணிகக் கோட்பாடு. |
|---|---|---|
| 1 | பன்னாட்டு வாணிகததை விளக்குவதற்கு **உழைப்பைச்** சார்ந்த மதிப்புக்கோட்பாட்டை அடிப்படையாகக் கெண்டது. | பன்னாட்டு வாணிகததை விளக்குவதற்கு **பொது மதிப்புக்** கோட்பாட்டை அடிப்படையாகக் கெண்டது. |
| 2 | இது ஒரு காரணி (உழைப்பு) மாதிரியாகும் | இது இரு காரணி (உழைப்பு, மூலதனம்) மாதிரியாகும். |
| 3 | ஒப்புமைச் செலவு வேறுபாட்டிற்கு உழைப்பாளர்களின் **உற்பத்தித் திறன்** வேறுபாடுகள் காரணம் என்கிறது. | ஒப்புமைச் செலவு வேறுபாட்டிற்கு உழைப்பாளர்களின் **கிடைப்பளவு** வேறுபாடுகள் காரணம் என நம்புகிறது. |

**47. வாணிக வீதத்தின் வகைகள்.**

1. நிகர பண்டமாற்று வாணிக வீதம் – தாசிக்
2. மொத்த பண்டமாற்று வாணிக வீதம் – தாசிக்
3. வருமான வாணி வீதம் – ஜி.எஸ்.மெடாரான்ஸ்.

**48. அயல் நாட்டுச் செலுத்துச் சமநிலையின் கூறுகள்.**

1. நடப்புக் கணக்கு, 2. மூல்தனக் கணக்கு 3. மைய வங்கித் தீர்வுக் கணக்கு அல்லது மைய வங்கி நிதிச்சொத்துக் கையிருப்புக் கணக்கு.
2.

**49. நிதிச்சொத்துக் கையிருப்புக் கணக்கு.**

ஒரு நாட்டின் நிதி சொத்துக் கையிருப்புக் கணக்கின் கீழ் தங்கத்தின் இருப்பு, எளிதாக மற்ற நாட்டு பணமாக மாற்றத்தக்க வெளி நாட்டு பணம், சிறப்பு எடுப்புரிமை மற்றும் பன்னாட்டுப் பண நிதியத்தின் நிகர கடன் பெறும் தகுதி நிலை ஆகியவை பதியப்படுகிறது.

**50. பண மதிப்புக் குறைப்பு/ செலாவணி மதிப்புக் குறைப்பு**

ஒரு நாட்டின் மைய வங்கி அந்நாட்டிள் பணத்தை மற்ற நாடுகளின் பண மதிப்பில் தானாக முன்வந்து குறைத்து நிர்ணயிப்பதே செலாவணி மதிப்புக் குறைப்பு ஆகும்

**எடுத்துககாட்டாக.** ஒரு டாலர் = ரூ.70 என்ற பண மாற்று வீதத்தை ஒரு டாலர் = ரூ.80 என்று குறைத்து நிர்ணயிப்பதை செலாவணி மத்ப்புக் குறைப்பு எனலாம்.

**51. இந்தியாவில் செலாவணி மதிப்புக் குறைப்பு நிகழ்வுகள்.**

இந்திய ரூபாய் 1947 லிருந்து மூன்று முறை மதிப்பிறக்கம் செய்யப்பட்டது.

1. செப்டம்பா 29, 1949. 2. ஜூன் 6, 1966, 3. ஜூலை 1, 1991.

**52. மாறுபடும் / நிலையற்ற பரிமாற்ற வீதம்.**

அயல் நாட்டுச் செலாவணி சந்தை விசைகளான மாறுகின்ற அயல்நாட்டுச் செலாவணிக்கான தேவையும், அளிப்பும் பரி மாற்று வீதத்தை நிர்ணயிக்கும் முறையே மாறுகின்ற பரி மாற்று வீதமாகும். **இதை மிதக்கும் பரி மாற்று வீதம் என்றும் அழைக்கலாம்.**

**53. வெளி நாட்டு நேரடி மூலதனத்தின் நோக்கங்கள்.**

1. விற்பனையை விரிவுப்படுத்துதல்
2. இயற்கை வளங்களைக் கையகப்படுத்துதல்.
3. வாணிக பரவலாக்கம்
4. போட்டி இடர்களைக் குறைத்தல்

**54. வெளி நாட்டு நேரடி மூலதனத்தின் பொருள். (FDI)**

வேறு நாட்டில் மூதலீடு செய்து நிறுவனத்தின் மேலாண்மையைத் தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக்கொள்வதையே வெளி நாட்டு நேரடி மூலதனம் என்கிறோம்.

**55. வெளி நாட்டு நிதி மூலதனம். (FPI )**

1. ஒரு நாட்டின் வெளிநாட்டினர் வங்கிகளில் நிறுவனப் பங்கு வாங்குவதில், முன் பேர வாணிகத்தில் முலீடு செய்வதை வெளி நாட்டு நிதி மூலதனம் எனலாம்.
2. இது வாணிகச் செலுத்துச் சமநிலை மூலதனக் கணக்கின் ஒரு பகுதியாகும்.

**56. வெளி நாட்டு நிதி நிறுவன முதலீடு(FII )**

1. வெளி நாட்டு நிதி நிறுவன முதலீடு என்பது பண அங்காடி, முன்பேர நிதி அங்காடிகளில் நிதி நிறுவனங்கள் ஆகியன வழியாகச் செய்யப்படும் நிதி மூலதனமாகும்.
2. குறுகிய கால இலாபத்திற்காகச் செய்யப்படும் முதலீடாகும்.
3. எடுத்துகாட்டாக, ஐக்கிய நாடுகளிலுள்ள ஒரு பரஸ்பர நிதி நிறுவனம் இந்தியாவைச் சார்ந்த ஒரு நிறுவனத்தில் முதலீடு செய்யலாம்.

**57. வெளி நாட்டு நேரடி மூலதனத்தின் நன்மைகள்**

1. வெளிநாட்டு மூலதனம் சென்றடையும் நாட்டின் மூதலன அளவை உயர்த்தி வேலைவாய்ப்பு அளவையும் அதிகரிக்கும்.
2. நேரடி வெளிநாட்டு மூலதனம் சென்றடையும் நாட்டிற்கு புதிய தொழில் நுட்பத்தையும் கொண்டு வருகிறது.
3. லாபத்தின் ஒரு பகுதியை மறுமுதலீடு செய்வதன் மூலம் தொழில்வளம் பெருகும்.
4. புதிய தொழில் மேலாண்மை முறைகளை அறிமுகப்படுத்தும்.
5. ஏற்றுமதியை அதகப்படுத்தி இறக்குமதிக்கான அவசியத்தை குறைத்து அயல்நாட்டுச் செலுத்துநிலை சமமின்மையை நீக்கும்.

**58. வெளி நாட்டு நேரடி மூலதனத்தின் தீமைகள்**

1. முன்னுரிமைத் தர வேண்டிய துறைகளுக்கு பதிலாக உயர்ந்த லாப வாய்ப்புள்ள துறைகளில் வெளிநாட்டு முதலீடு அதிகமாக செய்யப்படுகிறது.
2. முதலீடு செய்த நாட்டின் உள்நாட்டு அரசியலில் முதலீட்டு உரிமையாளர்கள் தலையிடுகறார்கள்.
3. சிறு மற்றும் குறு தொழில் நிறுவனங்களை வெளிநாட்டு நிறுவனங்கள் நசுக்கி விடுகிறது.
4. நுழையும் நாட்டிற்கு பொருத்தமற்ற தொழில் நுட்பதை கொண்டு வருகிறது.
5. வெளிநாட்டு நிறுவனத்தார் அறமற்ற வணிக நடவடிக்கைகயில் ஈடுபடுகின்றனர்.

**59. வெளிநாட்டு மூலத்னத்தால் பலனடைந்த இந்தியத் துறைகள்.**

இந்தியாவில் 1991ல் பொருளாதார சீர்திருத்தங்கள் செயல்படுத்தப்பட்டது.

1. நிதித் துறை, 2 காப்பீடு 3. தகவல் தொடர்பு 4. சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் துறை 5. மருந்து உற்பத்தி 6. மென்பொருள் மற்றும் தகவல் தொடர்பு

.

**60. இதியாவில் வெளிநாட்டு மூலதனம் தடை செய்யப்பட்டத் துறை**

1. போர்க்கருவிகள் மற்றும் ஆயுத உற்பத்தி
2. அணு ஆற்றல்
3. தொடர்வண்டி போக்குவரத்து
4. நிலக்கரி மற்றும் பழுப்பு நிலக்கரி
5. இரும்பு தாது, மாங்கனீசு, கிரோம், ஜிப்சம், சல்பர், தங்கம், வைரம், தாமிரம் போன்ற தாது சுங்கத்துறை.

## பாடம் –8.

**61. பன்னாட்டு பணநிதியம்**

உறுப்பு நாடுகளின் எண்ணிகை.189 (கடைசியாக 2016ல் நவ்ரு குடியரசு என்ற நாடு இணைந்தது.

| வ.எண். | நிறுவனம் | தலைமையிடம் | துவங்கப்பட்ட ஆண்டு. |
|---|---|---|---|
| 1 | பன்னாட்டு பண நிதியம் | வாஷிங்டன் டி.சி | **1945** |
| 2 | உலக வங்கி | வாஷிங்டன் டி.சி | **1945** |
| 3 | உலக வர்த்தக அமைப்பு | ஜெனிவா | **1995** |

**62. தாங்கிருப்பு வசதி என்றால் என்ன**

பன்னாட்டு நிதியம் கடன் வழங்கும் திட்டங்களில் ஒன்று.

தாங்கிருப்பு நிதி வசதி 1969 –ல் துவங்கபபட்டது. உணவு தானியங்கள் விளைவிக்கும் நாடுகள் தானிய சேமிப்பு கிடங்குகள் அமைத்து உணவுப் பொருள் விலை கட்டுப்படுத்தும் நோக்கத்தில் வழங்கப்படும் கடனே தாங்கிருப்பு வசதிக்கான கடனாகும்.

**63. உலக வங்கிக் குழுமத்தின் கீழ் செயல்படும் துணை நிறுவணங்கள்.**

1. மறுகட்டமைப்பு மற்றும் மேம்பாட்டுக்கான பன்னாட்டு வங்கி
2. பன்னாட்டு மேம்பாட்டு வங்கி
3. பன்னாட்டு நிதிக் கழகம்
4. பன்முக முதலீட்டு ஒப்புறுதி முகமை
5. முதலீட்டு பிரச்சனைகளை தீர்பபதற்கான பன்னாட்டு மையம்.

**64. உலக வங்கியின் நோக்கங்கள்.**

1. மறு சீரமைப்பு மற்றும் மேம்பாடு.
2. மூலதன முதலீட்டிற்கு ஊக்குவிப்பது.
3. பன்னாட்டு வாணிபத்திற்கு ஊக்குவிப்பது.
4. அமைதிகால பொருளாதாரத்தை ஊக்குவித்தல்.
5. சுற்று சூழல் பாதுகாப்பு.

**65. உலக வர்த்தக மையம். (WTC)**

WTC- என்பது அமெரிக்காவில் உள்ள நியூயார்க்கை தலைமையகமாகக் கொண்டு அமைந்துள்ளது. இரைட்டைக் கோபுரங்கள் என்று அழைக்கப்பட்ட **ஏப்ரல் 4, 1973ல்** துவங்கப்பட்டது. பின்னர் **செப்டம்பர், 11, 2001 அன்று** விமானத் தாக்குதலால் அழிக்கப்பட்டது. உலகம் முழுவதும் பன்னாட்டு வாணிபத்தில் ஈடுபடும் வணிகங்களை அது ஒன்று சேர்க்கிறது.

**66. வணிகம் தொடர்பான அறிவுசார் சொத்துரிமை ஒப்பந்தம். (TRIPS)**

1. பதிப்புரிமை ( 50 ஆண்டுகள்)
2. வணிக முத்திரை (7 ஆண்டுகள்)
3. காப்புரிமை ( 20 ஆண்டுகள்)
4. புவிசார் குறியீடு
5. தொழிழ் ரகசியம்
6. உற்பத்தி வடிவமைப்பு (10 ஆண்டுகள்) போன்றவை அறிவுசார் சொத்துரிமைகளாகும்.

இந்த ஒப்பந்தத்தின்படி **பொருட்கள் மற்றும் பொருட்களை உற்பத்தி செய்யும் முறை ஆகிய இரண்டுக்கும் காப்புரிமை வழங்கப்படும்.**

**66a. வாணிகம் தொடர்புள்ள முதலீட்டு வழிமுறைகள் ஒப்பந்தம் (Agreement on Trade Related Investment Measures) (TRIMs)**

1. வெளிநாட்டு மூலதனம் மீதான நிபந்தனைகளும் கட்டுப்பாடுகளும் தொடர்புடைய ஒப்பந்தம் ஆகும்.
2. உறுப்பினர் நாடுகளின் உள்நாட்டு வாணிகத்துக்கும் தொழில் நிறுவனங்களுக்கும் சமமாக வெளிநாட்டு நிறுவங்களையும் நடத்த வேண்டும் என இந்த ஒப்பந்தம் கூறுகிறது.

**கீழ்க்காணும் விதங்களில் வெளிநாட்டு மூலதனத்தின் மீதான கட்டுப்பாடுகளை நீக்க இந்த ஒப்பந்தம் கோருகிறது.**

1. எந்தெந்த துறைகளில் முதலீடு செய்ய வேண்டும் என்கிற கட்டுப்பாட்டை நீக்க வேண்டும்.
2. உள்நாட்டு இடுபொருளைப் பயன்படுத்த நிர்பந்திக்கக் கூடாது.
3. கட்டாய ஏற்றுமதி நிபந்தனையை விதிக்கக்கூடாது.
4. உரிமைத்தொகை, இலாபப்பங்கு மற்றும் வட்டி ஆகியவற்றை பன்னாட்டு முதலீட்டாளர்கள் வேறுநாட்டுக்கு எடுத்து செல்வதைத் தடைசெய்யக்கூடாது.
5. இறக்குமதிக்கு சமமாக ஏற்றுமதி செய்ய வேண்டுமெனவும் நிர்பந்திக்கக்கூடாது.

**67. WTO–ன் பணிகள்.**

1. WTO உடன்படிக்கைகளை நிர்வகித்தல்
2. வாணிப பேச்சுவாாத்தைக்ளுக்கான மன்றம்.
3. வாணிப தகராறுகளை கையாளுதல்
4. தேசிய வாணிக கொள்கைகளை கண்காணித்தல்.
5. வளர்ந்து வரும் நாடுகளுக்கான தொழில் நுட்ப உதவி மற்றும் பயிற்சி

**68. சிறப்பு எடுப்புரிமைகள் (SDRs) என்றால் என்ன.**

1. பன்னாட்டு நீர்மைத் தன்மையை உருவாக்க 1969ல் நிதியம் உருவாக்கப்பட்டது.
2. **தாள் தங்கம்** எனப்படுகிறது.
3. கட்ளைப் பணமாகும்
4. நாணய குழுமத்தின் வலுவான உரிமை கோரல்
5. உலக வைப்பு நாணயமாக செயல் படுகிறது.
6. உலக அளவிலான பண நீர்மையை உருவாக்குகிறது.

**69. உலக வங்கி கடன் வழங்கும் நடைமுறை**

1. வங்கியின் இருப்பில் உள்ள சொந்த நிதியிலிருந்து கடன் வழங்குகிறிது.
2. கடன் நிதியிலிருந்து கடன் வழகுகிறது.
3. ஈட்டுறுதி வழங்கி கடன் பெற்றுத் தருவது.

ஊராக மேம்பாட்டுக்கான **வேளாண்மைதுறைக்கு உறுப்நாடுகளின் ஏழைமக்களுக்கு பலனளிக்கும் வகையின் மூன்று வகையான நடவடிக்கைக்கு கடன் வழங்குகிறது.**

1. ஊரக வாழ்மக்களுக்கு கல்வியை பரப்புதல்.
2. ஊரக சாலைகளை மேம்படுத்துதல்.
3. கிராமங்களை மின்சாரமயமாக்கல்.

70.

| வ.எண். | விவரம் | ஆண்டுகள் |
|---|---|---|
| 1 | பன்னாட்டு பண நிதியம் | 1945 |
| 2 | உலக வங்கி | 1945 |
| 3 | உலக வர்த்தக அமைப்பு | 1995 |
| 4 | சிறப்பு எடுப்புரிமை (SDRs) | 1969 |
| 5 | IMF - ன் கட்டமைப்பு சரி செய் தல் வசதி ( SAF) | மார்ச் 1986 |
| 6 | IMF - ன் விவாக்கப்பட்ட கட்டமைப்புக் கடன் திட்டம் ( ESAF) | டிசம்பர் 1987 |
| 7 | **WTC** – உலக வர்த்தக மையம் விமான தாக்குதலால் அழிக்கப்பட்ட ஆண்டு | செப்டம்பர் 11, 2001 |
| 8 | **WTO- ன்** முதல் மாநாடு | 1996 |
| *9* | SAARC அமைக்கப்பட்ட ஆண்டு | டிசம்பர் 8, 1985 |
| 10 | SAARC- தலைமைச் செயலமாக நேபாள் தலைநகரம் காட்மாண்டு செயல்பட துவங்கிய ஆண்டு | ஜனவரி 16, 1987 |
| 11 | சார்க் அமைப்பில் ஆப்கானிஸ்தான் இணைந்த ஆண்டு | ஏப்ரல் 3, 2007 |
| 12 | சார்க் வேளாண் தகவல்மையம் துவங்கப்பட்ட ஆண்டு | 1988 |
| 13 | ஆசியன் அமைப்பு நிறுவப்பட்ட ஆண்டு (ASEAN) | ஆகஸ்ட் 8, 1967 |
| 14 | இந்தியா ஆசியானுடன் கூட்டாளியாக (விவாதங்களில் பங்கேற்கும் நாடாக செயல்பட துவங்ககிய ஆண்டு) | 1992 |
| 15 | பிரிக் என்ற சுருக்க பெயர் பயன்படுத்தப்பட்ட ஆண்டு **( பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா) BRIC** | 2001 |
| 16 | பிரிக்ஸ் என்ற சொல் சேர்க்கப்பட்ட ஆண்டு **( பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா. தென் ஆப்பிரிக்கா) BRICS** | 2010 |

# பாடம் – 9.

**71. வரி வருவாய்கள் / வரிசார வருவாய்கள்**

| வ.எண். | **வரி வருவாய் மூலங்கள்** | **வரிசாரா வருவாய் மூலங்கள்.** |
|---|---|---|
| 1 | வருமான வரி | கட்டணம் |
| 2 | நிறுவன வரி | தண்டத் தொகை |
| 3 | விற்பனை வரி | பொதுத் துறை நிறுவனங்களின் வருவாய்கள் |
| 4 | கூடுதல் கட்டணம் | மேம்பாட்டுக்கான சிறப்பு தீர்வைகள் |
| 5 | செஸ் ( வரிக்கு வரி) | அன்பளிப்புகள், மான்யங்கள், உதவிகள் மற்றும் **மரண தீர்வை** |

**72. மறைமுக வரிகள் எடுத்துக்காட்டு.**

1. உற்பத்தி வரி, 2. சுங்கத் தீர்வை, 3. விற்பனை வரி **(GST)** 4. கேளிக்கை வரி 5. சேவை வரி

**73. மூழ்கும் நிதி**

பொதுக்கடனை திருப்பி செலுத்தும் முறைகளில் ஒன்று.

1. கடனுக்கென அரசு தனியொரு நிதியினை ஏற்படுத்தும் அதனை மூழ்கும் நிதி என்பர்
2. அரசு ஒவ்வொரு வருடமும் ஒரு குறிப்பிட்ட நிலையான தொகையை செலுத்துகிறது.
3. கடன் முதிர்ச்சியடையும் போது வட்டியோடு அசலையும் சேர்த்து வழங்கும் வகையில் இந்நிதி பெருகிவிடும்.
4. **இந்த முறை முதன்முதலில் இங்கிலாந்தைச் சேர்ந்த வால்போல் என்பவரால் அறிமுகப்படுத்தப்பட்டது.**

**74. கடனை மாற்றுதல்**

பொதுக் கடன் திரும்பச் செலுத்தப்படும் மற்றொரு முறை கடன் மாற்றுதல் ஆகும். இம்முறையில் பழைய கடனை புதிய கடனாக மாற்றப்படுகிறது. இம் முறையின் கீழ் அதிக வட்டி கொண்ட பொதுக்கடன் குறைவான வட்டி கொண்ட பொதுக்கடனாக மாற்றப்படுகிறது. **டால்டன் கடன் மாற்றுதல் கடன் பளுவை குறைக்கிறது என்கிறார்.**

**75. கடன் மறுப்பு**

அரசு கடன் செலுத்தும் சுமையிலிருந்து வெளி வருவதற்கான எளிமையான முறையாகும் இதில் அரசானது ஏற்கனவே செலுத்துவதாக உறுதியளித்த கடமையை மறுக்கும். இது கடனை திரும்ப செலுத்துவதாகாது, அதனை அழிப்பதாகும். சாதாரண சூழ்நிலைகளில் கடனை மறுக்க இயலாது ஏனெனில் அது அரசின் நாணயத்தன்மையை பாதித்து விடும்.

**76. மூலதன பட்ஜெட்**

மூலதன வரவுகள் மற்றும் மூலதனச் செலவுகளை உள்ளடக்கியதாகும். மூலதன வரவின் முக்கிய ஆதாரங்களாக கடன்கள், முன்பணம் போன்றவை உள்ளது. மூலதன செலவீனத்தை திட்டம் சார் செலவினம் மற்றும் திட்டம் சாரா மூலதனச் செலவு என வகைப்படுகிறது.

**77. நிதிக்கு வாக்கெடுப்பு வரவு செலவுத் திட்டம் (நொண்டி வாத்து வரவு செலவுத் திட்டம்)**

**1. இந்திய அரசியலமைப்பு ஷரத்து 116ன்படி, பட்ஜெட் வருட மத்தியில் சமர்ப்பிக்கப்படும் அதற்கு அரசியல் காரணம் இருக்கிறது.**

இருக்கக்கூடிய அரசானது தேர்தல் காரணமாக அந்த வருடம் முழுவதும் தொடர்ந்தோ தொடராமலோ இருக்கலாம். இதனால் அந்த அரசு தாக்கல் செய்யும் வரவு செலவுத் திட்டம் **"நொண்டி வாத்து வரவு செலவு திட்டம்"** என அழைக்கப்படுகிறது.

**78. செயல்திறன் வரவு செலவுத்திட்டம்.**

1. **ஒரு வரவு செலவு திட்டத்தின் வெளயீட்டின் அடிப்படையில் வரவு செலவுத்திட்டம்** அமைந்தால் அது செயல் திறன் வரவு செலவுத் திட்டம் எனப்படும்.
2. **சார்உப்பர் தலைமையில்** அமெரிக்காவில் **1949–ல் நிர்வாக சீர்திருத்தக் குழு அமைக்கப்பட்டது.**
3. மக்களின் நலனுக்காக இந்த வரவு செலவுத் திட்டத்தில் "**என்ன செய்தோம்**" "**எவ்வளவு செய்தோம்**" என்பதை மக்களுக்கு தெரிவிக்க வேண்டும்.
4. **இந்தியாவில் செயல் திறன் வரவு செலவுத் திட்டத்தை "சாதனை திட்டம்" என அழைக்கப்படுகிறது.**

**79. வரவு செலவுத் திட்டம்**

| |
|---|
| வரவு செலவுத் திட்டம் தயாரிகும் வழிமுறைகள் |
| நிதி அமைச்சகம் வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டை தயார் செய்யும் |
| பல்வேறு துறைகள் வருமானம் மற்றும் செலவு மதிப்பீடுகளை நிதி அமைச்சகத்திற்கு அனுப்பும் |
| வரவு செலவு திட்டம் தயாராகும் |
| மந்திரி சபை ஒப்புதலுக்கு, நிதி அமைச்சர் தாக்கல் செய்வார். |
| பாராளுமன்றத்தில் பட்ஜெட் தாக்கல் செய்வதற்கு தயார் நிலையில் இருக்கும். |

**80. வரவு செலவு திட்டத்தில் பாராளுமன்ற கட்டுப்பாடுகள்.**

**இந்தியாவில் அரசுக் கணக்குகள் (மூன்று முறைகள்)**

1. தொகுப்பு நிதி 2. ஆவசர நிதி 3. பொதுக் கணக்கு

**வரவு செலவுத் திட்டத்தை கட்டுப்படுத்தும் பாராளுமன்ற குழுக்கள்.**

1. பொதுக் கணக்கு குழு
2. மதிப்பீட்டுக் குழு

**81. கூட்டாட்சி நிதி**

கூட்டாட்சி நிதி என்பது மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கு இடையே வருவாய் வளங்களை ஒதுக்கீடு குறித்து தெளிவாக வரையறுக்கப்பட்டிருக்கிறது.

**அரசியலமைப்பின் ஏழாவது அட்டவணையில் மூன்று பட்டியல்கள் உள்ளன.**

1. **மத்திய பட்டியலின் பாதுகாப்பு, ரயில்வே, தபால் மற்றும்** தந்தி முதலிய தேசிய முக்கியத்துவம் வாய்ந்த **100 இனங்களைக் கொண்டுள்ளது.**
2. மாநில பட்டியலில் **பொது நலன், காவல் போன்ற 61 இனங்களைக்** கொண்டுள்ளது.
3. **இணைப்பு பட்டியலில் 52–இனங்கள்** மத்திய மற்றும் மாநிலங்களுக்கு பொதுவாக உள்ளது. **இதில் மின்சாரம், தொழிற் சங்கம், பொருளாதார மற்றும் சமூகத் திட்டங்கள் போன்றவை உள்ளடங்கும்.**

**82. மத்திய, மாநில அரசின் பணப்பங்களிக்கும் உறவு வருமான வழிகள்.**

**1. மைய அரசின் வருவாய் மூலங்கள்.**

1. தொழில் நிறுவனங்கள் மீதான விரி
2. பணம், நாணயங்கள் மற்றும் அந்நியச் செலாவணி
3. சுங்கவரி ஏற்றுமதி வரி உட்பட
4. புகையிலை மற்றும் இந்தியாவில் உற்பத்தி செய்யப்படும் ஏனைய பொருட்களுக்கான கலால் வரி.
5. ஆயல் நாட்டு கடன்கள்
6. இந்திய ரிசர்வ் வங்கியிடம் பெறும் பணம்
7. மத்திய அரசின் பொதுக்கடன்
8. இரயில்வே துறையின் மூலம் கிடைககும் வருவாய்.
9. இந்திய அரசால் அல்லது மாநிலங்களால் அமைக்கப்பட்ட லாட்டரி சீட்டுகள்.
10. தொலை தொடர்பு துறையின் வருவாய்கள்
11. இரயில், கடல் வழி மற்றும் ஆகாய மார்க்கமாக செல்லும் பயணிகள் மற்றும் சரக்கு மீதான வரி.

**2. மாநில அரசின் வருவாய் மூலங்கள்**

1. வேளாண் நிலங்கள் மீதான வரி
2. மது மற்றும் போதைப் பொருட்கள் மீதான கலால் வரி
3. பண்ணை வரி (விவசாய நிலங்கள்)
4. நில வருவாய்
5. வேளாண் வருமான வரி
6. நிலம் மற்றும் கட்டிடங்கள் மீதான வரி
7. மின்சாரர நுகர்வு மற்றும் விற்பனைக்கான வரி
8. சாலை மற்றும் நீர் வழி மார்க்கமாக எடுத்துச் செல்லப்படும் பொருட்கள் மற்றும் பயணிகள் மீதான வரி.
9. வாகனவரி, விலங்குகள் மற்றும் படகுகள் மீதான வரி.
10. சாலை சுங்க கட்டணம்.

**3. மத்திய அரசால் விதிக்கப்பட்டு, வசூலிக்கப்பட்டு மாநிலங்களுக்கு ஒதுக்கக்கூடிய வளங்கள் ( சரத்து 269–ன்படி)**

1. விவசாய நிலம் தவிர்த்த இதர சொத்துகள் மீதான வரி
2. பண்ணை வரி (வேளாண்மை நிலம் தவிர்த்த)
3. இரயில்வே கட்டணங்கள் மற்றும் சரக்கு கட்டணங்கள்.
4. செய்தி தாள் மீதான வரி ( அதில் வெளியிடும் விளம்பரம் உள்பட)
5. இரயில், கடல் வழி மற்றும் ஆகாய மார்க்கமாக செல்லும் பயணிகள் மற்றும் சரக்குமீதான வரி.

4. **மத்திய அரசால் விதிக்கப்பட்டு, ஆனால் மாநில அரசு வசூலிப்பது மற்றும் பயன்படுத்துவது (ஷரத்து 268)**
   வில்லை கட்டணம் மற்றும் சுங்கவரி மருத்துவ மற்றும் கழிவறை மீதான வரி (மத்திய படடியலில் குறிப்பிட்டுள்ளது) இந்திய அரசு விதிக்கும் ஆனால்
   1. யூனயன் பிரதேசங்களில் இந்திய அரசே வசூலிக்கும்.
   2. மற்ற வகையில், மாநிலங்களே அவைகளை விதிக்கும்.

5. **மத்திய அரசால் விதிக்கப்பட்டு, வசூலிக்கப்பட்டு மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசக்ளுக்கு பகிர்ந்தளிக்க கூடிய வரிகள் (ஷரத்து 270 மற்றும் 272 )**
   1. வேளாண்மை வருவாய் தவிர்த்த இதர வருமான வரி வருவாய்.
   2. இந்திய அரசின் மத்திய பட்டியலில் உள்ள மத்திய கலால் வரி (மருத்துவ மற்றும் கழிவறை மீதான வரி தவிர்த்த)

**83. இந்திய நிதிக் குழுவின் பணிகள்.**

1. **ஷரத்து 280 (3)** நிதிக்குழுவின் பணிகள் பற்றி கூறுகிறது. இச்ஷரத்தின்படி இக்குழு **குடியரசுத் தலைவருக்கு** பின்வருவனவற்றை பரிந்துரை செய்கிறது.
   மத்திய மற்றும் மாநிலங்களுக்கிடைடயே நிகரவரி வருவாய்களை ஒதுக்கீடு செய்து, மாநிலங்களுக்கு அவற்றிற்குரிய பங்கை பகிர்ந்தளித்தல்.
2. மத்திய அரசு மாநிலத்திற்கு வழங்கவுள்ள மானிய அளவு பற்றியும் **(ஷரத்து 275 (1) )** மற்றும் அம்மானியம் பெறுவதற்கு மாநில அரசின் தகுதி குறித்து கொள்கைகளை உறுதி செய்தல்.

**84. உள்ளாட்டசி அமைப்பின் வகைகள்.**

1. கிராம ஊராட்சி
2. மாவட்ட வாரியங்கள் அல்லது ஜில்லா அமைப்பு
3. நகராட்சி
4. மாநகராட்சி

**1. கிராம ஊராட்சியின் வருவாய் ஆதாரங்கள்.**

1. பொது சொத்து வரி
2. நிலம் மீதான வரி
3. தொழில் வரி
4. விலங்குகள் மற்றும் வாகனங்கள் மீதான வரி.

**2. மாவட்ட வாரியங்கள் அல்லது ஜில்லா அமைப்பு வருவாய் ஆதாரங்கள்**

1. மாநில அரசிடமருந்து பெறும் மானிய உதவி
2. நில தீர்வைகள்
3. சுங்க கட்டணம்
4. சொத்திலிருந்து பெறுகிற வருமானம் மற்றும் மாநில அரசுகளிடமிருந்து பெறுகின்ற கடன்கள்.
5. பொருட்காட்சிகள் மற்றும் கண்காட்சிகளிலிருந்து பெறப்படுகின்ற வருமானம்.

**3. நகராட்சி அமைப்பின் வருவாய் மூலங்கள்**

1. சொத்து மீதான வரிகள்
2. பொருட்கள் மீதான வரிகள், குறிப்பாக நுழைவு வரி
3. தனிப்பட்ட வரிகள், தொழில்வரி, வியபாரம், வேலைவாய்ப்பு போன்றவற்றின் மீதான வரி
4. வாகனங்கள்மற்றும் விலங்குகள் மீதான வரி
5. திரையரங்கு வரி
6. மாநில அரசிடமருந்து பெருகிற மானிய உதவி

**4. மாநகராட்சியின் வருவாய் மூலங்கள்**

1. சொத்து மீதான வரி
2. வாகனங்கள் மற்றும் விலங்குகள் மீதான வரி
3. வாணிபம் மற்றும் வேலைவாய்பு மீதான வரி
4. திரையரங்கு வரி மற்றும் காட்சி வரி
5. நகரத்திற்குள் கொண்டு வரும் பொருட்கள் மீதான வரி
6. விளம்பரங்கள் மீதான வரிகள்
7. நுழைவு வரி மற்றும் முனைம வரி.

85. 1. வி**கிதாச்சார வரி –** வரியின் அடிப்படையக் கருத்தில் கொள்ளாது அனைவருக்கும் **ஒரே வரி வீதம்.** (Rs. 10,000 10% 20,000 10% % 30,000 10%)

3. **வளர் வீத வரி –** வருமானம் உயர உயர **வரி வீதம் உயரும்.**
(Rs. 10,000 10% 20,000 20% 30,000 30%)

4. **தேய்வீத வரி –** வருமானம் உயர உயர வரி **வீதம் குறைதல்**
(Rs. 10,000 10% 20,000 8 % 30,000 6%)

## பாடம் – 10

**86. சுற்று சூழல் பொருட்கள்.**

1. சுற்றுச்சூழல் பொருட்கள் என்பவை **சந்தையிடா பொருட்களான தூய்மை** காற்று, பசுமையான போக்குவரத்து உள்கட்டமைப்பு, பொது பூங்காக்கள், ஆறுகள், மலைகள், பசுமை, வழிகள் கடற்கரை போன்றவையாகும்.

2. தனியார் சொத்துரிமை இல்லாத, பொதுவாக அனைவராலும் பயன்படுத்தப்படும் இப்பொருட்களை இலாபக்குறிக்கோள்காரர்களின் சுரண்டலிருந்து பாதுகாப்பது மனித நல்வாழ்வுக்கான அடிப்படையாகும்.

**87. பசுமை குடில் விளைவுகள் என்றால் என்ன**

கரியமில வாயு, மீத்தேன், குளோரோபுளோரா கார்பன் நைட்ரஸ் ஆக்ஸைடு போன்ற பசுமைக் குடில் வாயுக்களின் அளவு வளிமண்டலத்தில் அதிகரிப்பதால் புவியின் வெப்பம் அதிகரிக்கின்றது. இதை **பசுமை குடில் விளைவு என்பர்.**

**88. மாசுபடுதலின வகைகள்**

1. காற்றுமாசுபடுதல் (சட்டம் 1981 வரையறுக்கப்பட்டது)
2. நீர் மாசுபடுதல்
3. ஒலி மாசுபடுதல்
4. மண் மாசுபடுதல் (சுற்று சூழல் செயல்பாடுகளின் பாதுகாப்பு விதி 1997.)

**89. மரபுசாரா எரி பொருள் ஆற்றல் வகைகள்.**

1. Biogas. 2. CNG, 3. LPG.

**90. தூர்ந்துபோதல்**

காற்றில் அதிக அளவில் கலந்துள்ள நைட்ரஜன் போன்ற நச்சுக்காற்று தாவரங்கள், விலங்கினங்கள் மற்றும் மீன்களை பெருமளவில் பாதிக்கிறது.

**91. திடக்கழிவுகள் என்றால் என்ன**

மனித நடவடிக்கைககளில் பயனில்லாத தேவையற்ற பொருட்களைக் கழிப்பதே திடக் கழிவுகள் ஆகும்.

1. அவை திடப் பொருட்களாகவோ, பகுதி திடப்பொருட்களகவோ அல்லது திரவமாகவோ இருக்கும்.
2. வீட்டுக் கழிவுகள், மருத்துவமனைக் கழிவுகள், இறந்த பிராணிகள், கட்டுமானத்துறைக் கழிவுகள், சாம்பல் விவசாயக் கழிவுகள் மற்றும் தொழிற்சாலைக் கழிவுகள் திடக் கழிவின் வகைகளாகும்.

**92. உவர் நிலம்**

1. பாசன வசதி பெற்ற நிலங்கள் மற்றும் வறண்ட பகுதிகளில் உள்ள கிட்ட தட்ட 50 சதவீத நிலங்களில் ஓரளவு உவர் பிரச்சனை உள்ளது.
2. பயிரின் வேர்ப்பகுதிகளில் அதிக அளவு உப்பு/அமிலம் படிந்து நிலத்தின் உற்பத்தித் திறனை பகுதியாகவோ அல்லது முழுமையாகவோ பாதிக்கின்றது.
3. இத்தகைய நிலங்கள் பிரச்சனை ( உவர், உப்பு, மற்றும் அமிலம்) நிலங்கள் எனப்படுகிறது. இத்தகைய உவர் நிலங்கள் பெரும்பாலும் **பஞ்சாப்,ஹரியானா, உத்திரப்பிரதேசம் ஆகிய மாநிலங்கள் உள்ளடங்கிய இந்து கங்கைச் சமவெளிகளில் காணப்படுகின்றது.**
4. சத்தீஸ்கார், ராஜஸ்தான், ஆந்திரப்பிரதேசம், குஜராத், மஹாராஷ்ட்ரா, கர்நாடகா, மத்தியப்பிரதேசம் மற்றும் தமிழ்நாடு ஆகிய மாநிலங்களில் ஒருசில பகுதிகளில் காணப்படுகிறது.

**93. பூமியின் நுரையீரல் என்றால் என்ன.**

1. மரங்கள் உயிர் காற்றை அளித்து காற்றின் பண்பை உயர்த்துகின்றது.
2. தண்ணீர், மண்வளம் ஆகியவற்றைப் பாதுகாத்து வனவிலங்குகளுக்கு உதவியாக உள்ளது.
3. மரங்கள் ஒளிச் சேர்க்கையின்போது கரியமில வாயுவைக் கிரகித்து நாம் சுவாசிக்கும் உயிரிக் காற்றை வெளியிடுகின்றது. எனவே **மரங்கள் பூமியின் நுரையீரல் எனப்படுகிறது.**

**94.**
1. **பொருள்சார் சமநிலை** – ஆலன் நீஸ் மற்றும் R.V. அய்யர்ஸ்
2. காற்று மாசு தடுப்பு மற்றும் கட்டுப்படுத்தல் சட்டம் – – 1981.
3. சுற்றுச்சூழல் செயல்பாடுகளின் பாதுகாப்பு விதி – 1997.
4. **“இயற்கை வளத்தின் அளவு எக்காலத்திலும் குறையாமல் இருக்க வேணடும்” – 1989 (பியர்ஸ் மற்றும் மார்கண்டேயா, மற்றும் பார்பியர் )**
5. சுற்றுப்புறச் சூழல் மற்றும் மேம்பாட்டிற்கான உலக அமைப்பு – 1987.
6. **நீடித்த நிலையான மேம்பாட்டு இலக்குகள் – 2030க்குள் 17. குறிக்கோள்களை சாதிக்க வேண்டும் UNO (உலகப் பொதுமை , ஒருங்கிணைப்பு, மாற்றம்)**

**95. அங்கக வேளாண்மை (அல்லது) கரிம வேளாண்மை (அல்லது) இயற்கை வேளாண்மை**

1. இயற்கை பண்ணை முறை என்பது கால் நடை சாணம், இயற்கைக் கழிவுகள் ஆகியவற்றை உரமாகவும் பயிர் பூச்சி மருந்துகளைப் பயன்படுத்தியும் பருப்பு வகைகள் முதலானவற்றைப் பயிரிட்டு பயிர்ச் சுழற்சி முறையையும் பயன்படுத்தி செய்யப்படும் வேளாண்மையாகும்.
2. இதில் ரசாயன உரங்களும் பூச்சிக் கொள்ளி மருந்துகளும் பயன்படுத்தப்படுவதில்லை.
3. வேளாண் சூழல் அமைப்பில் உள்ள நிலத்தின் தன்மை, பயிர்கள், கால்நடைகள் ஆகியவற்றையும் மக்களையும் கருத்தில் கொண்டு உத்தம அளவு உற்பத்தி செய்யும் உள்ளடக்கிய அமைப்பு முறையே இயற்கை பண்னைகளாகும்.

## பாடம் – 11

**96. பொருளாதார அணுகுமுறை.**

**மைக்கேல் பி.டொடாரோவின்** கருத்துப்படி “முன்னேற்றத்தை சமூக அமைப்பு, பொது மக்களின் மன நிலை மற்றும் நாட்டின் நிறுவன அமைப்புகள் ஆகியவற்றில் நிகழும் பெரிய மாற்றங்கள் மற்றும் விரைவான வளர்ச்சி, வருவாய் ஏற்றத்தாழ்வினை குறைத்தல் மற்றும் வறுமை ஒழிப்பு ஆகிய அனைத்தையுமே பொருளாதார முன்னேற்றமாக கருதவேண்டும்” என்கிறார்.

**97. வளர்ச்சி குன்றிய பொருளாதாரம் ( பின் தங்கிய பொருளாதாரம்)**

1. வளர்ச்சி குன்றிய பொருளாதாரம் என்பது ஒரு நாட்டில் குறைவான தலா வருமானம், பரவலான வறுமை, வருவாய் மற்றும் செல்வ பகிர்வில் கடுமையான ஏற்றத்தாழ்வு.
2. அதிக மக்கள் தொகை, குறைவான மூலதன ஆக்கம், அதிக அளவு வேலையின்மை, பழமையான உற்பத்தி முறை **எதிரும் புதிருமான** பண்புகள் ஒருசேர நிலவுவதல் **(Dualism )** போன்றவற்றை பண்புகளாக் கொண்டதாகும்.

**98. பொருத்துக**

1. முதல் தொழில் கொள்கை – 1948
2. இந்திய அரசியல் அமைப்பு சட்டம் – ஜனவரி 26, 1950.
3. திட்டக் குழு – மார்ச் 15, 1950
4. முதல் திட்ட காலம் – ஏப்ரல் 1, 1951.
5. முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் கலாம் – 1951 – 1956.
6. திரு.எம்.விஸ்வேஸ்வரய்யா – 1934( இந்திய பொருளாதார திட்டமிடல்)
7. ஜவர்ஹலால் நேரு – 1938 ( தேசியத் திட்டக் குழு)
8. பாம்பே திட்டம் –1940 (1938–ல் முன்மொழிவு 15. ஆண்டுகள்)
9. எஸ்.என். அகர்வால் –1944. காந்திய திட்டம் ( வேளாண்மை மற்றும் கிராமப் பொருளாதார முன்னேற்றம்.)
10. எம்.என்.ராய் – 1945. (மக்கள் திட்டம்)
11. ஜெயப்பிரகாஷ் நாராயணன் – 1950 சர்வோதயத் திட்டம் ( **காந்தி மற்றும் வினோபா பாவே கருத்தாதல் தயாரிக்கப்பட்டது.)**
12. திட்ட குழுக்கு பதிலாக நிதி ஆயோக் அமைக்க முடிவு எடுத்த ஆண்டு – ஆகஸ்டு 13, 2014.
13. திய ஆயோக் நடைமுறைப் படுத்தப்பட்ட ஆண்டு – ஜனவரி 1, 2015.

**99. உருவகத் திட்டமிடல் ( உருவப் பொருள் திட்டமிடல்)**

உருவப் பொருள் திட்டமிடல் என்பது **மனித வளம், இயற்கை வளம்** மற்றும் இயந்திரங்கள் போன்ற பருமப் பொருட்களை ஒதுக்கீடு செய்யும் திட்டமிடல் முறையாகும்.

**100. நித ஆயோக் சிறந்த நிர்வாகமான 7 துாண்கள்.**

1. மக்கள் சார்பு 2. செயல்திறன் சார்பு 3. பங்கேற்பு 4. மேம்பாடு 5. அனைத்தையும் உள்ளடக்கியது. 6. சமத்துவம். 7. வெளிப்படைத் தன்மை.

## பாடம் – 12.

**101. புள்ளியலின் தந்தை சிறுகுறிப்புவரைக**

கடந்த நூற்றாண்டில் இங்கிலந்து நாட்டில் வாழ்ந்த தாவரவியல் அறிஞர் **ரொனால்டு பிஷர்** (1890–1962) முக்கிய புள்ளியில் பங்களிப்பான **உடற்கூறு மரபியல், உளவியல், கல்வியில், விவசாயம் மற்றும் இதர துறைகளுக்கான பயன்பாட்டினை விரிவாக்கினார்.** மேலும் மதிப்பீட்டுக் கோட்பாடு, மாறுபாட்டுப் பகுப்பாய்வு, வடிவமைப்புச் சோதனைகள் போன்ற புள்ளியியல் பாடங்களின் முதன்மையாளராக இருந்தார், அதனால் அவர் **புள்ளியிலின் தந்தை எனப்படுகிறார்.**

**102. புள்ளியலின் வகைகைள் யாவை.**

**இரண்டுவகைப்படும்.**

1. விவரிப்புப் புள்ளியியல்.
2. உய்துணர்வு புள்ளியியல்.

**103. பொருளாதார அளவையில் என்றால் என்ன**

**ஆர்தர் எஸ்.கோல்ட்பெர்க்கர்–** கூற்றுப்படி “பொருளாதார அளவையில் என்பது பொருளாதார கோட்பாடு, கணிதம், புள்ளியில் உய்த்துணர்வு ஆகிய கருவிகளைக் கொண்டு பொருளியில் நிகழ்வுகளை ஆய்வு செய்யும் ஒரு சமூக அறிவியல் ஆகும்.”

(பொருளாதாரம் + புள்ளியில் + கணதம்) + எண்வடிவ புள்ளி விவரங்கள் = பொருளாதார அளவையில் ஆகும்.

**104. இந்திய புள்ளியலின் வளர்ச்சி மற்றும் இந்திய புள்ளியலின் தந்தை குறிப்பு வரைக**

1. இந்தியாவில் **சந்திரகுப்த மௌரியர்** காலத்திலேய புள்ளியிலைப் பயன்படுத்தியதற்கான ஆதாரங்கள் உள்ளன.
2. அவர்காலத்தில் பிறப்பு, இறப்பு பதிவுகளை உள்ளடக்கிய உயிர்ப் புள்ளியியல் பதிவேடுகள் பராமரிக்கப்பட்டு வந்தன.
3. கி.மு.300ற்கு முன்பே இதைப்பற்றிய செய்திகள் கௌடில்யரின் **அர்த்த சாஸ்திரத்தில்** குறிப்பிடப்பட்டிருந்தன.
4. **அக்பரின் ஆட்சிக் காலத்தில்** நடத்தப்பட்ட புள்ளிவிவர மற்றும் நிர்வாகவிவர விசாரணைகள் பற்றி **" அயினி அக்பரி " (1596–97)** என்ற நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.
5. நவீன புள்ளியலின் நிறுவனர் மற்ம் **இந்திய புள்ளியலின் தந்தை** என்றழைக்கப்படுபவர் **பி.சி.மஹலநோபிஸ் ஆவார்.**
6. **2007லிருந்து அவரின் பிறந்த நாளான ஜூன் 29.** புள்ளியல் நாளாகக் கொண்டாடப்படுகிறது.

**105. புள்ளியியிலின் பணிகள்.**

1. புள்ளியல் விவரங்களை துல்லியமான வடிவில் வழங்குகிறது.
2. இது பரந்த விவரங்களை சுருக்கி தருகிறது.
3. ஒது ஒப்பீடுகளைச் செய்ய உதவுகிறது.
4. இது எடுகோள்களை உருவாக்கவும், சோதனைக்கு உட்படுத்தவும் உதவுகிறது
5. இது மதிப்பீடுகளைச் செய்ய உதவுகிறது.
6. கொள்கைகளை உருவாக்குவதில் இது உதவுகிறது.

**106. புள்ளியலின் வகைகைள் யாவை.**

**இரண்டுவகைப்படும்.**

1. விவரிப்புப் புள்ளியியல்.
2. உய்துணர்வு புள்ளியியல்.

| வ.எ | **விவரிப்பு புள்ளியல்** | **உய்த்துணர்வு புள்ளியியல்** |
|---|---|---|
| 1 | ஆய்வில் உள்ள முழுத்தொகுதியையும் விளக்குகின்றது. | மாதிரி ஆய்வின் அடிப்படையில் முழுத்தொகுதி பற்றி முடிவெடுக்கப்படுகின்றது |
| 2 | புள்ளி விவரங்களை வரைபடங்களாகவும் விளக்கப்படங்களாகவும் வழங்குகின்றது. | கருதுகோள்களை சோதனை செய்து கணிக்கின்றது. |
| 3 | புள்ளி விவரங்கள்ளின் சுருக்கங்களைத் தருகின்றது. | மாரியைத் தாண்டி முழுத் தொகுப்பினை அறிந்து கொள்ள பயன்படுகிறது, |

**107. புள்ளிவிவர ஆதாரங்களின் அடிப்படையில் வகைப்படுத்துதல்.**

1. முதல்நிலை விவரங்கள் 2. இரண்டாம் நிலை விவரக்ள்.

**1. முதல் நிலை விவரங்கள் (Primary Data)**

விவரங்கள் குறிப்பிட்ட நோக்கத்துடனும் **முதல் நிலையாகவும் விவர சேகரிப்பாளரால் திரட்டப்பட்டிருந்தால் அவைகள் முதல்நிலை விவரங்கள் எனப்படும். இவைகள்** கூறுகளிடமருந்தோ அல்லது முழுத்தொகுப்பையோ விவர சேகரிப்பிற்கு பயன்படுத்திக் கொள்வதாகும்.

**எடுத்துகாட்டு**

1. மாணவர்களின் மதிப்பெண்னை அவர்களிடமிருந்து நேரடியாக பெற்றுக்கொள்வது.
2. விவசாயிகளின் நில அளவுகளை விவசாயிகளிடமிருந்து சேகரிப்பது.

**2. இரண்டாம் நிலை விவரங்கள் (Secondary Soures)**

பொது நோக்கத்திலோ அல்லது குறிப்பிட்ட நோக்கததிற்காக மற்றொருவர் ஏற்கனவே சேகரித்து வைத்திருககும் விவரங்களை **நாம் அதை வைத்திருப்பவரிடம் சென்று சேகரித்தால், அவ்விரங்களை இரண்டாம் நிலை விவரங்கள் என்கிறோம்.**

**எடுத்துகாட்டு**

1. மக்கள் தொகை கணக்கெடுப்பு பதிவேடு (Census Reports)
2. மத்திய புள்ளி விவர அமைப்பின் வெளியீடுகள் (CSO)
3. தேசி கூறெடுப்பு விசாரணை அமைப்பின் வெளியீடுகள்(NSSO)
4. இந்திய ரிசர்வு வங்கியின்அறிக்கைகள். ( Reserve Bank of India Bulietin)
5. பொருளாதார ஆய்வு அறிக்கைகள் (Economic Surveys)
6. புத்தகங்கள், பொருளியலுக்கான பருவ இதழ்கள். (Economic Journals)

**109. கூட்டுச்சராசரி அல்லது சராசரியின் வகைகள்.**

**கூட்டுச்சராசரி அல்லது சராசாரி ஐந்து வகை சராசரிகள் உள்ளன.**

| வ.எ | கூட்டுச்சராசரி வகைகள் | கூட்டுச்சராசரியின் வேறு பெயர். |
|---|---|---|
| 1<br>2<br>3 | கூட்டுச்சராசரி<br>இடைநிலை<br>முகடு | சாதாரன அல்லது எளிய சராசரிகள். |
| 4<br>5 | பெருக்குச் சராசரி<br>இசைச் சராசரி | சிறப்புச் சராசரிகள். |

**110. சராசரி என்பதன் பொருள்.**

1. மையபோக்கு அளவை என்பது எந்த எண்ணைச் சுற்றி மற்ற எண்கள் இருக்கின்றதோ அந்த எண்ணினை கண்டறிவது.
2. எந்த ஒரு எண்ணை மற்ற எண்கள் பிரதிபலிக்கின்றதோ அந்த எண்ணே சராசரி ஆகும்.
3. மொத்தமாக அனைத்து எண்களையும் தொகுத்துச் சொல்கிறதோ அதுதான் எண்களின் மையம் எனப்படுகிறது.

**111. விலகள் அளவைகள்.**

1. சராசரி அல்லது மையபோக்கு அளவைகள் ஒரு எண் பரவலின் மையத்தினை மட்டுமே காட்டுகிறது. அப்பரவலின் மையத்திலிருந்து ஒவ்வொரு எண்ணும் எவ்வளவு துாரம் இருபக்கத்திலும் விலகி நிற்கிறது என்பதனை தெரிவிப்பதில்லை.
2. இவ்விலகலைப் பற்றிய அறிவினை நமக்கு தெரிவிப்பது விலகள் அளவு முறையாகும்.

விலகல் அளவைகள் **இரண்டு வகைப்படும்.**

1. துனித்த விலகல் அளவைகள் 2. ஒப்பீட்டு விலகள் அளவைகள்.

**1. தனித்து விலகல் அளவைகள்.**

எந்த அலகுகளில் எண்பரவல் தரப்பட்ருக்கின்றதோ, அதே அலகுகலில் விலகல் அளவைகள் கணக்கிடப்பட்டு தரப்பட்டால் அவைகள் தனித்த விலகல் அளவைகள் எனப்படுகிறது.

**2. ஒப்பீட்டு விலகல்கள்** அளவைகள் அலகுகளிலிருந்து விடுபட்டவை. அவை தனித்த எண்கள், எனவே ஒன்றுக்கும் மேற்பட்ட எண் பரவல்களின் விலகல் அளைவைகளை ( வேறுபட்ட அலகுகளில் அவைகள் தரப்பட்டிருந்தாலும்) நாம் ஒப்பிட முடியும்.

**112. திட்ட விலக்கம் இலக்கணம்.**

திட்ட விலக்கவும் **கார்ல் பியர்ஸன் 1893–ஆம் ஆ**ண்டு நாமக்கு அறிமுகப்படுத்தினார். திட்ட விலக்மானது “ **விலகல் வர்க்கங்களின் சராசரியின் வர்க்க மூலம்**” எனவும் அழைக்கப்படுகிறது.

**திட்ட விலக்கம் – இலக்கணம்.**

“ஒவ்வொரு மதிப்பும் அதன் சராசரியிலிருந்து விலகியிருக்கும் அளவின் வர்க்கத்தின் கூட்டுச்சராசரியின் நேரிடை வர்க்க மூலம்திப்பாகும்.”

**113. உடன் தொடர்பு பகுப்பாய்வு ( r )**

உடன் தொடர்பு பகுப்பாய்வு என்பது **இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மாறிகள்** எவ்வாறு **ஒன்றுடன் ஒன்று தொடர்பு கொண்டு மாறுகின்றன** என்பதை பற்றி கணக்கிடுவது ஆகும். **சர் பிரான்சிஸ் கால்ட**ன் என்பவர் இப்பகுப்பாய்வை கண்டறிந்தார்.

**114. உடன் தொடர்பின் வகைகள்**

**காரல் பியர்சன் –** உடன் தொடர்பின் வகைகள்.

| | | |
|---|---|---|
| 1 | மாறிகளுக்கு இடையேயான உறவின் திசையின் அடிப்படையில் வகைப்பாடு | நேர் மறை உடன் தொடர் |
| | | எதிர் மறை உடன் தொடர்பு |
| 2 | பகுப்பாய்விற்கு எடுத்துக் கொள்ளப்படும் மாறிகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் வகைப்பாடு | எளிய உடன் தொடர்வு |
| | | பன்முக உடன் தொடர்வு |
| | | பகுதி உடன் தொடர்பு |
| 3 | மாறிகள் மாறும் விகிதத்தின் அடிப்படைடயில் வகைப்பாடு | நேர் கோட்டு உடன் தொடர்பு |
| | | வளைகோட்டு உடன் தொடர்பு |

**115. உடன் தொடர்பினை அளவிடும் முறைகள்.**

1. சிதறல் விளக்கப்படம்.
2. வரைபட முறை
3. கார்ல் பியர்சனின் உடன் தொடர்புக் கெழு முறை
4. மீச்சிறு வர்க்க முறை

**116. சிதறல் விளக்கப்பட முறையின் நன்மைகள்**

1. இது மிகவும் எளிமையான மற்றும் கணக்கீடுகளற்ற முறையாகும்.
2. இது கடைநிலை மதிப்புகளினால் பாதிக்கப்படுவதில்லை.
3. மாறிகளுக்கிடையேயான உடன்தொடர்பைக் கண்டறிவதில் இது ஒரு அடிப்படை நிலை.

**117. சிதறல் விளக்கப்பட முறையின் குறைகள்**

1. சிதறல் விளக்கப்பட முறையினை கொண்டு மாறிகளுக்கிடையேயான உடன்தொடர்பினை (ஒருசில சூழ்நிலைகளைத் தவிர ) துல்லியமான கணக்கிட முடியாது.
2. அவைகளுக்கிடையேயான உறவு அதிகமாக இருக்கிறதா அல்லது குறைவாக இருக்கிறதா என்பதனை மட்டுமே கூற முடியும்.

**118. நேர்மறை உடன் தொடர்பு, எதிர்மறை உடன்தொடர்பு**

| வ.எ. | **நேர்மறை உடன் தொடர்பு** | **எதிர்மறை உடன் தொடர்பு** |
|---|---|---|
| 1 | இருமாறிகளின் மதிப்புகளும் **ஒரே திசையில் நகர்ந்து சென்றால்** அதனை நேர்முறை உடன்தொடர்பு என்கிறோம் | இரு மாறிகளின் மதிப்புகள் **எதிர் எதிர் திசையில் நகர்ந்து சென்றால்** அதனை எதிர்மறை உடன்தொடர்பு என்கிறோம். |
| 2 | **உதாரணம்.** **வருமானம் அதிகரிக்கும்பொழுது செலவும் அதிகரிக்கிறது.** ஆகவே வருமானம் மற்றும் செலவு மாறிகள் **நேர்மறை உடன்** தொடர்பைக் கொண்டிருக்கிறது என்கிறோம். | **உதாரணம்** **விலை அதிகரிக்கு**ம்பொழுது பொருள்களுக்கான **தேவை குறைந்து** செல்கிறது. |
| 3 | **Y = a + bx** | **Y = a - bx** |

**119. ஒட்டுறவுப் போக்குப் பகுப்பாய்வு (Regression Analysis)**

1. ஒட்டுறவுப் பகுப்பாய்வு ‘ **ரெக்கரசன்**’ **(Regression)** என்ற வார்த்தையினை முதன்முதலில் **(1877ல்) உருவாக்கியவர் பிரான்ஸ்ஸிஸ் காடல் ஆவார்.**
2. தனது ஆய்விற்காக தந்தைகளின் உயரத்திற்கும் மகன்களின் உயரத்திற்கும் உள்ள தொடர்பினை அறிய முற்படும்பொழுது குறிப்பிட்ட உயரமுடைய பெற்றோர்களுக்குப் பிறந்த குழந்தைகளின் சராசரி உயரம் மொத்த தொகுதிக்குமான சராசரி மதிப்பை நோக்கிச் செல்கின்றது என்பதை உறுதிபடுத்தினார்.
3. இப்பெயர் கரணத்தை கொண்டு அவர் இதற்கு ‘ **ரெக்கரசன்**’ **(Regression)** என பெயரிட்டார். **இதன் பொருள் சராசரியை நோக்கித் திரும்பிச் செல்லுதல் அல்லது திரும்பிப் பார்த்தல் என்பதாகும்.**
4. **காடல்னின் பின்னோக்கிச் செல்லும் பொது விதி (Galton's Law of Universal Regression)** 1000 குடும்பத்திலுள்ளவர்களின் உயரத்தை சேகரித்து உறுதி படுத்தினார்.
5. **ஒட்டுறவு என்ற சொல்லின் விளக்கம் – சராசரியை நோக்கிப் பின் செல்லுதல் – ஆகும்.**

**120. உடன் தொடர்பிற்கும் ஒட்டுறவிற்கும் இடையே உள்ள வேறுபாடுகள்.**

| வ.எ. | **உடன் தொடர்பு** | **ஒட்டுறவு.** |
|---|---|---|
| 1 | இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட **மாதிறிகளின் மதிப்பு ஒரே திசையில்** மாற்றமடைகின்றதா அல்லது எதிர்திசையில் மாற்றமடைகின்றதா என்பதை ஆராயும் | **ஒரு மாறியின் மதிப்பில் மாற்றம் மற்ற மாறியின் மதிப்பில் எத்தகைய மாற்றத்தை ஏற்படுத்தும்** என்பதே ஒட்டுறவு ஆகும். இங்கு இரண்டு மாறிகள் மட்டுமே பயன்படுத்தப்படுகிறது. |
| 2 | X,Y என்ற இரு மாறிகளும் தனித்த மாறிகள். | ஒருமாறி தனித்த மாறியாகவும் மற்றொன்று சார்பு மாறியாகவும் எடுத்துக் கொள்ளப்படுகின்றது. |
| 3 | இருமாறிகளுக்கிடையே உள்ள தொடர்பை மட்டும் ஆராய்கிறது. காரண விளைவுகளை ஆய்வு செய்வதில்லை. | இருமாறிகளுக்கிடையே காரண விளைவை ஆராய்ந்து அவைகளுக்கு இடையே சார்புத் தொடர்பை ஏற்படுத்துகின்றது. |
| 4 | உடன் தொடர்பு காரணி சார்பு **r** அளவையாகும். இதன் மதிப்பு **–1 முதல்** +1 வரை இருக்கும் | ஒட்டுறவுக் காரணிகளும் சார்பு அளவைகளே இவற்றைப் பயன்படுத்தி தனித்தமாறி சார்பு மாறியின் மதிப்பில் ஏற்படுத்தும் மாற்றத்தின் அளவைக் காணலாம். |
| 5 | தொடர்பில்லா இருமாறிகளுக்கு இடையில் **போலி உடன்தொடர்பு ஏற்படும்** | ஒட்டுறவு ஆய்வில் **போலி ஒட்டுறவு இல்லை** |
| 6 | இது அதிகம் மேற்கணக்கீட்டிற்கு **பயன்படுத்தப்படுவதில்லை.** | இது அதிகம் மேற்கணக்கீட்டிற்கு **பயன்படுத்தப்படுகின்றது.** |

**121. பொருளாதார அளவையியல்**

1. **நார்வே நாட்டு** பொருளியல் மற்றும் புள்ளியியில் அறிஞர் **ரேக்கனர் பிரிக்ஸ்க் 1926ல் கணிதம், புள்ளியியல் முறைகள் மற்றும் பொருளியல் ஆகிய மூன்று பாடங்களையும் இணைத்து பொருளாதார பாடம் உருவாக்கினார்.**
2. **' எகனாமேட்டிரிக்ஸ்' என்பது 'ஆக்கோவியா.' 'உட்பொவ்'** என்ற இரு **கிரேக்கச் செல்லிருந்து உருவாகியது.**
3. பொருளாதார அளவையில் என்பது **பொருளியல், புள்ளியியல் மற்றும் கணிதம்** ஆகிய **மூன்றின் ஒருங்கிணைப்பாகும்.**

**123. அலுவலகப் புள்ளிவிவரங்கள்.**

1. அலுவலக புள்ளிவிவரங்கள் என்பன அரசு அலுவலங்கள், பன்னாட்டு அமைப்புகள் உள்ளிட்ட மற்ற பொது நிறுவனங்களினால் வெளியிடப்படுவதாகும்.
2. புள்ளியில் துறை திட்ட அமலாக்கத் துறையுடன் இணைக்கப்பட்டது முதல் புள்ளியியல் திட்ட அமலாக்க அலுவலகம் தனி அமைப்பாக 1999 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது.

**தேசிய புள்ளியியல் அலுவலகம் (National Statstical Office,NSO)**

1. மத்திய புள்ளியியல் கழகம் (Central Statistcal Orfanization, CSO) கணினி மையம், தேசிய மாதிரி கூறெடுப்பு விசாரணை அலுவலகம் (National Sample Survey Office,NSSO) உள்ளது.

**124. நடுவண் புள்ளியியல் அலுவலகம்.(Central Statistcal Office, CSO)**

நடுவன் புள்ளியியல் அலுவலகம் **இரு பிரிவுகளைக் கொண்ட தேசிய புள்ளியில்** அமைப்பின் அங்கமாகும். இதன் முக்கியமான பணி நாடுமுழுவதிலும் நடைபெறும் புள்ளிவிவர சேகரிப்புகளை ஒருங்கிணைப்பதும், அவற்றினைப் பரிசோதிப்பதும், தர மேம்பாட்டினை உறுதி படுத்துவதும் ஆகும்.

**125. தேசிய மாதிரி கூறெடுத்தல் அலுவலகம் (National Sample Survey Office,NSSO)**

1. தேசிய மாதிரி கூறெடுத்தல் **கழகம்** தற்பொழுது தேசிய மாதிரி கூறெடுத்தல் **அலுவலகம் என** அழைக்கப்படுகிறது.
2. இது இந்திய புள்ளியியல் அமைச்சகத்தின் கீழ் செயல்படும் அமைப்பாகும்.
3. **1950 ஆம் ஆண்டுமுதல் தொடர்ச்சியாக சமூககொருளாதார புள்ளிவிர விசாரணைகளை மேற்கொள்கிறது**
4. **இதில் நான்கு பிரிவுகள் உள்ளன. 1.** விசாரணை வடிவமைத்தல், ஆய்வுத் துறை 2. களப்பணித் துறை 3. புள்ளிவிவர செயலாக்கத் துறை 4. ஒருங்கிணைப்பு வெளியீட்டுத்துறை.

**126. திட்ட அமலாக்கத் துறை.**

திட்ட அமைலாக்கத் துறையின் கீழ் **மூன்று அமைப்புகள் உள்ளன.**

1. 20 அம்ச திட்டம்.
2. உள்கட்டமைப்புக் கண்காணிப்பும் திட்டக் கண்காணிப்பும்.
3. பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் வளர்ச்சித் திட்டம்.

**127. பொருளாதார முன்னேற்றத்தை அளவிடும் சமூக குறியீடுகள் (Social Indicators)**

1. மக்களின் தேவைகளையும் அடிப்படை தேவைகளையும் கூட்டுத் தேவையையும் நிறைவு செய்வதை சமூகக் குறியீடுகள் என அழைக்கப்படுகிறது.
2. நேரடியாக வழங்கப்படும்அடிப்படை தேவை என்பது மக்களின் **நலவாழ்வு, கல்வி, உணவு, குடிநீர், துப்புரவு, வீட்டு வசதி ஆகியவையாகும்.**

**128. பொருளாதார முன்னேற்றத்தை நிர்ணயிக்கும் காரணிகள்.**

**நான்கு வகைப்படும்**

**( 1. பொருளாதாரம். 2. சமூகம். 3. அரசியல். 4. மதம் சார்ந்த காரணிகள்).**

## 129. சுருக்கம்.

| வ.எ. | விளக்கம் | |
|---|---|---|
| 1 | 1. ‘ஸ்டேட்டிஸ்டிக்’ ‘(Statistik)’ | **1749 ஆம்** ஆண்டு காட்பிரீட் அக்கன்வால் வெளியிட்டார். |
| 2 | புள்ளியியலின் தந்தை | ரொனால்டு பிஷர் ( இங்கிலாந்து தாவரவியல் அறிஞர்) |
| 3 | இந்தியாவின் நவீனபுள்ளியியலின் தந்தை | பி.சி.மஹலநோபிஸ் (இங்கிலாந்து) 2007 ஆம் ஆண்டிலிருந்து இவரது பிறந்த நாளான ஜூன் 29 புள்ளியியலின் நாளாக் கொண்டாடப்பட்டு வருகிறது. |
| 4 | உடன் தொடர்பு பகுப்பாய்வு ( r ) | சர் பிரான்சிஸ் கால்டன் |
| 5 | உடன் தொடர்பு வகைகள் | கார்ல் பியர்சன் |
| 6 | ஒட்டுறவுப் போக்குப் பகுப்பாய்வு | சர் பிரான்சிஸ் கால்டன் |
| 7 | பொருளாதார அளவையியல் | **நார்வே நாட்டு** பொருளியல் மற்றும் புள்ளியில் அறிஞர் **ரேக்கனர் பிரிக்ஸ்க் 1926ல்** உருவாக்கினார். ( 1969 நோபல் நினைவு பரிசு) |
| 8 | பொருளாதார அளவையியல் | பொருளியல் + புள்ளியில் + கணிதம் = பொருளாதார அளவையியல். |
| 9 | NSO | National Statistical Office |
| 10 | NSSO | National Sample Survey Office **(1950)** |
| 11 | CSO | Central Statistical Organization |
| 12 | புள்ளியியல், திட்ட அமலாக்க அமைச்சகம் தனி அமைப்பாக நடைமுறைக்கு வந்த ஆண்டு | **1999** |

**(((()))).**

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com